விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 08 சனிக்கிழமை (22.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 154

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

## மின்சாரம் தாக்கி மாணவன் பலி

(வடமராட்சி)

வடமராட்சி தும்பளைப் பகுதியில் மின்சாரம் தாக்கி மாணவன் ஒருவன் நேற்று உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் தும்பளையைச் சேர்ந்த, தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி பயிலும் செல்வராசா நிரோஷன் (வயது-14) என்ற மாணவனே உயிரிழந்தவராவார்.

தும்பளை நெள்ளத்தைப் பத்திரகாளி ஆலயத்தில் தொண்டில் ஈடுபட்டிருந்தபோதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்துள்ள மாணவனின் சடலம் மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-9,24)

## இலங்கையின் யுத்தக் குற்றம் தொடர்பில் அமெரிக்கா ஜூன் 16 இல் அறிக்கை வெளியீடு

### ரைம்ஸ் பத்திரிகை தகவல்

(நியூயோர்க்)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து அமெரிக்காவின் யுத்தக் குற்றங்களுக்கான தூதுவர் ஸ்ரீபன் ரெப் அடுத்த மாதம் 16 ஆம் திகதி தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளார் என ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

இலங்கை மீது இன்னமும் செல்வாக்குச் செலுத்தும் நிலையில் அமெரிக்காவுள்ளது. இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளியாக அமெரிக்கா விளங்குகின்றது.

மேலும் சர்வதேச நெருக்கடி குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இருவரையும் விசாரிப்பதற்கான நியாயாதிக்கம் அமெரிக்காவுக்குள்ளது.

இருவரையும் அமெரிக்க அதிகாரிகள் கடந்த வருடம் விசாரணை செய்தனர். எனினும் இதன் மூலம் சிறிய ராஜதந்திர சர்ச்சை மாத்திரமே உருவானது. கதை அத்துடன் முடியவில்லை.

எவ்வாறாயினும் இந்தக் கதை இத்துடன் முடிபடைந்து (16 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை போர்க் குற்றங்களுக்கான புதிய ஆதாரங்கள் கண்டுபிடிப்பு!

## மனித உரிமை கண்காணிப்பகம் வெளியிட்டது

(கொழும்பு)

இலங்கையில் இறுதிக் கட்டப் போரின் போது ஏற்பட்ட போர்க் குற்றங்களுக்கான ஆதாரங்கள் பல தமக்குக் கிடைத்துள்ளதாக மனித உரிமைக் கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

அதற்கான சில படங்களையும் அவ் அமைப்பு வெளியிட்டுள்ளது. எனினும் இலங்கை அரசாங்கம் அதனை நிராகரித்துள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)



மனித உரிமை கண்காணிப் பகம் வெளியிட்ட படம்.

## வன்னியில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் அடிப்படை வசதிகள் இன்றித் தவிப்பு!

### கூட்டமைப்பு எம்.பிக்கள் நேரில் அவதானிப்பு

(கிளிநொச்சி)

வன்னியின் பல பகுதிகளிலும் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் அடிப்படை வசதிகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர் என்று வன்னிக்குச் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளுக்கான விஜயத்தினை நேற்று மேற்கொண்டிருந்தனர்.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகிய இருவரையும் தவிர்ந்த ஏனைய 12 உறுப்பினர்களும் இந்த விஜயத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

வவுனியா கிழக்கு நெடுங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த மதியமடுக் கிராமம், நெடுங்கேணி நகரம், ஒலுமடு, வற்றாப்பளை, விளாங்குளம் மற்றும் துணுக்காய் போன்ற பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்துள்ள கூட்டமைப்பு உறுப்பினர்கள் அம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பீரிஸ் அடுத்த வாரம் அமெரிக்காவுக்கு விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அடுத்த வாரம் அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது இரு நாட்டு அரசாங்கங்களுக்குமிடையில் இரு தரப்புப் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் அமெரிக்காவின் ராஜாங்கச் செயலாளர் கிலாரி கிளின்டனையும் அமைச்சர் சந்தித்து உரையாற்ற எதிர்பார்ப்பதாகவும் வெளிவிவகார அமைச்சின் தகவல் பிரிவொன்று தெரிவித்தது.

இதேவேளை (16 ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவுக்கு எதிரான இராணுவ நீதிமன்ற அமர்வை மேற்கொள்ள அனுமதியளிப்பு

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிராக நியமிக்கப்பட்டிருந்த முதலாவது இராணுவ நீதிமன்றத்தின் அமர்வுகளுக்கு விதித்திருந்த தடையை மேன்முறையீட்டு நீதிமன்றம் விலக்கிக் கொண்டுள்ளது.

முதலாவது இராணுவ நீதிமன்றத்திற்கு எதிராக ஜெனரல் சரத் பொன்சேகா தாக்கல் செய்திருந்த மனுவை நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்தத் தடையை விலக்கிக் கொண்டது.

இராணுவ நீதிமன்ற அமர்வுகளை நடத்த விதித்திருந்த தற்காலிக தடை நேற்றுடன் முடிபடைந்ததால் அதனைத் தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் எனப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர சபை மேயரின் செயலாளர் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட யாழ். மாநகர சபை மேயரின் செயலாளர் கே.பற்குணராசா எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

அத்துடன் யாழ்.மாநகர சபை மேயர் யோகேஸ்வரி பற்குணராசாவும் நீதிமன்றில் பிரசன்னமாகி இது தொடர்பில் விளக்கமளித்தார்.

நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டமை தொடர்பில் யாழ்.மாநகர சபை மேயரின் செயலாளரை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு யாழ்.பொலிஸ் நிலைய சிறு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந் நிலையில் (16 ஆம் பக்கம் பார்க்க)

# வங்கிக்குச் செல்லுபவர்கள் மீது தினமும் சேட்டை செய்யும் குரங்கு

## சுன்னாகம் பொலிஸில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் இருக்கும் குரங்கு ஒன்று அப்பகுதியில் உள்ள வங்கி ஒன்றுக் குச் செல்லும் வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பல்வேறு அசௌகரியங் களை ஏற்படுத்தி வருவதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள் ளது.

சுன்னாகம் நவீன சந்தை மேல்மாடியி லுள்ள வங்கிக்கு அருகில் பெரிய ஆலமர மொன்று உள்ளது. அதில் வசித்து வரும் குரங்கே பல்வேறு இன்னல்களை ஏற்படுத்தி வருவதாக வங்கி ஊழியர்களால் முறையிடப் பட்டுள்ளது.

வங்கிக்குச் செல்லும் வாடிக்கையாளர் களின் மற்றும் பணியாளர்களின் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கைப்பைகளை பறிப்பது, இலத்திரனியல் உபகரணங்களின் வயர்களை அறுத்து வங்கிச் செயற்பாடுகளை நிறுத்துவது வாடிக்கையாளர் கள் மற்றும் பணியாளர்களுடன் சேட்டைசெய் வது போன்ற செயற்பாடுகளில் அக்குரங்கு ஈடுபடுவதாக முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 19ஆம் திகதி அவ் வங்கிக்கு புதிதாக பயிலுநராகச் சென்ற யுவதி ஒருவரை அக்குரங்கு கடுமையாகத் தாக்கி யுள்ளது.

குரங்கின் தாக்குதலுக்குள்ளான அவ் யுவதி தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குரங்கின் இவ்வாறான செயல்பாடுகள் குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பல தடவைகள் முறையிடப்பட்டுள்ளதாகவும் எனினும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை எனவும் வங்கி ஊழியர்கள் தரப் பில் தெரிவிக்கப்பட்டது. (சு)

# அதிர்ச்சி தரும் குறுந்தகவல்கள் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டது

## விசாரணை மூலம் தெரியவந்தது

(கொழும்பு)

இலங்கையில் கையடக்கத் தொலை பேசிப் பாவனையாளர்களுக்கு அண்மை யில் கிடைக்கப் பெற்ற அநாமதேய குறுந்தக வல் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்டிருப்ப தாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள் ளது.

இந்த அநாமதேய குறுந்தகவல் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலும் பரப்பியிருந்ததாக தொலைத் தொடர்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பல்பிட்ட குறிப்பிட்டார்.

இது தொடர்பாக கையடக்கத் தொலை பேசி வலையமைப்புக்கள் சிலவற்றிடமி ருந்து தமக்கு ஆரம்பக்கட்ட அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

சகல வலையமைப்புக்களிடமிருந்தும் அது தொடர்பான அறிக்கை கிடைத்ததும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் அவற்றை ஒப்படைக்கவுள்ளதாக அனுஷ பல்பிட்ட தெரிவித்தார். (ச-3)

# சிசுவின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் பிறந்து சில நாட் களான சிசுவின் சடலம் ஒன்று கிணற்றிலி ருந்து மீட்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸாரினால் மீட்கப் பட்ட அச் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிசுவின் கொலைக்குக் காரணமான பெண் ணைத்தேடி பொலிஸார் வலை விரித்துள்ள னர். (ச-9)


# நன்றி நவில்கின்றோம்



யாழ். மாவட்ட அமைப்பாளர்
திரு.கந்தசாமி கமலேந்திரன் (கமல்)



கௌரவ அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா



காரைநகர் பொறுப்பாளர்
திரு.கே.கண்ணன் (றஜனி)

காரைநகர் மருதபுரம் கிராமத்தில் முதன் முதலாக புதிய வீதியும், மின்சாரமும் அதற் கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன். இவ் உதவியை அமைத்துத் தந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஐயா அவர்களை வாழ்த்துவதோடு, இதற்கான முயற்சியை எடுத்த காரைநகர் பொறுப்பாளர் திரு.கே.கண்ணன் (றஜனி) அவர்களையும், யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு.கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோரையும் பாராட்டி நன்றி நவில்கின்றோம்.

**மருதபுரம் கிராம அபிவிருத்தி சங்கம்**
**மற்றும் அக் கிராம மக்கள்**

(1546)


# நாடு கடந்த தமிழீழ அரசு தொடர்பில் குழப்பமடைய வேண்டியதில்லை

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்

(கொழும்பு)

நாடு கடந்த தமிழீழ இராச்சியம் தொடர்பில் குழப்படைய வேண்டிய அவசியமில்லை என வெளிவிவ கார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித் துள்ளார். நாடு கடந்த தமிழீழ இராச் சிய உருவாக்கத்திற்கு உலகின் எந்த வொரு நாட்டு அரசாங்கமும் ஆதர வளிக்கவில்லை.

முக்கியமாக இந்த முயற்சியில் 11 பேர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் களை அடையாளம் கண்டுள்ள தாகவும் அமைச்சர் தெரிவித்துள் ளார். தமிழீழ விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட நாடுகளில் நாடு கடந்த தமிழீழ இராச்சிய உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரு வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடுகடந்த தமிழீழ இராச்சிய உரு வாக்கத்தை மையமாகக் கொண்டு உலக நாடுகளில் நடைபெற்று வரும் வாக்கெடுப்புக்கள் தொடர்பில் தூது வராலயங்கள் மற்றும் உயர்ஸ்தானி கராலயங்களின் மூலம் விளக்க மளிக்கப்படவுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர் பில் சில அமைப்புக்கள் வெளியிட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை யற்றவை எனவும் எவ்வித ஆதாரங் களும் இன்றி குற்றம் சுமத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகைத் திட்டத்தை நீடிப்பதற்கு அரசாங்கம் முனைப்பு காட்டும் சந்தர்ப்பங் களில் இவ்வாறான குற்றச்சாட்டுக் களை சில அமைப்புக்கள் தொடர்ச் சியாக சுமத்தி வருகின்றன.

புலம்பெயர் தமிழர்கள் இலங் கை விவகாரங்களில் ஆக்கபூர்வ மான பங்களிப்பினை நல்க வேண்டு மென அவர் கோரிக்கை விடுத்துள் ளார். குறிப்பாக வடக்கு கிழக்கு அபி விருத்தி நடவடிக்கைகளுக்கு ஆதர வளிக்க வேண்டுமென அவர் தெரி வித்துள்ளார். (ச-5)


# கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பமாணி உங்கள் கனவை நனவாக்கும்.

தற்போது கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பமாணி கற்கை நெறியானது அனைவரும் பயிலக்கூடியதாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

BIT

தகவல் தொழில்நுட்பத்தில் அதிக நாட்டமுள்ள மாணவர்கள் பலரும் வகுப்பறைக்கல்வி O/L , A/L என்பவற்றில் தமது திறமையை வெளிக்காட்டமுடியாமல் போய்விடுகின்றனர். திறமையிருந்தும் சந்தர்ப்பசூழ்நிலையால் இவர்களது பல்கலைக்கழக கல்வியானது ஒரு கலைந்த கனவாக தொலைந்த வாழ்க்கையுடன் நிர்க்கதியான நிலைக்கு போய்விடுகின்றனர்.

தகவல் தொழில்நுட்பத்துறையில் இவர்களது பட்டக்கனவை இப்போது கொழும்பு பல்கலைக்கழகம் நனவாக்குகின்றது!.

ஆம் தற்போது O/L , A/L தகைமையை பெறத்தவறிய மாணவர்களும் கொழும்பு பல்கலைக கழகத்தின் FIT எனும் கற்கை நெறியை பூர்த்தி செய்வதன் மூலம் கொழும்பு பல்கலைக் கழகத்தின் தகவல் தொழில்நுட்பமாணி கற்கை நெறிக்கு உள்வாங்கும் தகைமையை பெறுகின்றார்கள்.

யூலை மாதப் பரீட்சைக்கான சிறப்புப் பிரிவு

கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து விருதினை பெற்றுக்கொண்ட இல 324 பலாலி வீதி பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள எம்.சி.எஸ் தகவல் தொழில்நுட்பவளாகத்தில் ஆரம்பமாகவுள்ளது. பதிவுகளை 23-05-2010 இற்கு முன்னர் மேற்கொள்ளவும்.

கடந்த 11திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பரீட்சையில் தோற்றி சித்தி பெற்ற கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக்கற்கை நெறியை பயிலும் தகைமை பெற்ற எமது நிறுவன மாணவர்கள்.



S.Kunashanthini , R.Subakanthan, R.Srikireeshan, N.Gnanenthira, T.Yathavan, J.Arujeenan, S.Rubatheesan,

**MCS** அனைவருக்கும் ICDL, Hardware கற்கைநெறிகளிற்கு 100% Discount

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.(பரமேஸ்வராச்சந்தி அருகே)

Supported By UNDP/JRRP

0772395895, 0718475501

web: www.mcsitcampus.org

Bus Route 764



# ஜென்சிகா தையலகம் பெண் வேலையாள் தேவை

சங்கானையில் இயங்கும் பிரபல்யமான தையல் நிறுவனத் திற்கு அனைத்து தையல் தொழில் தெரிந்த பெண் பிள்ளை கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். விளம் பரம் வெளியாகி ஒரு கிழமைக்குள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:

**ஜென்சிகா தையலகம்**

சங்கானை, மண்டிகைக் குளத்திற்கு அருகாமை.

(சி-300)



# அறிவித்தல்

அனைத்து கேபிள் T.V இயக்குனர்களுக்கும் இணை இயக்குனர் கள் பொதுமக்கள் அனைவருக்கும் ஓர் முக்கிய அறிவித்தல்.

யாழ். மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்து கேபிள் T.V இயக்குனர் களையும் இணை இயக்குனர்களையும் இணைத்து ஒரே குடையின் கீழ் யாழ். மாவட்ட கேபிள்T.V இயக்குனர் சங்கம் என்ற அமைப்பில் இணைத்து அனைத்து சட்ட பூர்வமான அனுமதியுடன் நவீன தொழில் நுட்பங்களை ஏற்படுத்தி கேபிள் T.V தொழிலை சிறப்பிடம் செய்யும் நோக்கத்திற்காக எம்மால் எமது சங்கம் மூலம் ஒவ்வொரு இணைப் புக்கும் (50/- ஐம்பது ரூபாய்) அறவிடப்படுகின்றது.

மேற்படி பணம் எமது தொழில் விருத்திக்காக மட்டுமே பயன்படுத்தப் படுகின்றது என்பதையும் இப் பணம் எவருடைய தூண்டுதலின் மூலமோ எந்த விதமான அரசியல் நோக்கத்திற்காகவோ, அரசியல் கட்சி களுக்காகவோ, பெறப்படவில்லை என்பதையும் அவ்வாறான தவறான தகவல் மூலம் எமக்கு எல்லா விதத்திலும் உதவி புரியும் யாரையும் புண்படுத்த வேண்டாம் எனவும் தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

(ஒற்றுமையே உன்னதம்)

இவ்வண்ணம்

யாழ். மாவட்ட கேபிள் T.V இயக்குனர் சங்கம்

தலைவர்/செயலாளர்

182, K.K.S.Road, யாழ்ப்பாணம்.

(1544)

# இன்று ஒரு தகவல்

## வாழ்வின் இயல்பு

கிரேக்கதேசத்தில் ஒரு ராஜா இருந்தார். அவர் வித்தியாசமான குணமுடையவர்.

பிடிவாத குணமும், பைத்தியக்காரத்தனமும் குடி கொண்டிருந்தது.

அவரிடம் ஓர் அழகான கட்டில் இருந்தது. தங்கத்தால் செய்த அந்தக் கட்டிலில் விலையுயர்ந்த வைரங்களெல்லாம் பதித்து வைத்திருந்தார்கள்.

அதில் மரமே கிடையாது. எல்லாம் தங்கம்,வைரம், வைடூரியம். அவ்வளவு விலையுயர்ந்த கட்டில் வேறெங்கும் கிடையாது. அப்பேற்பட்ட அபூர்வமான கட்டில் அது.

அந்த ராஜா தனக்கென்று சில கொள்கைகளை வைத்திருந்தார்.

அரண்மனைக்கு யாராவது முக்கியமான விருந்தினர்கள் வந்தால் அவர்களை அந்தக் கட்டிலில் படுக்க வைப்பார்.

ஆனால் ஒரு விடயம். வருகை தரும் விருந்தினரின் உயரம் அந்தக் கட்டிலில் நீளத்துக்குச் சமமாக இருக்க வேண்டும். அப்படி ஒரு ஒழுங்கு முறையை அவர் எதிர்பார்த்தார்.

யாராவது ஒரு விருந்தினர் வந்தால் அன்றிரவே அந்தக் கட்டிலில் படுக்க அனுமதி கொடுப்பார். அவ் விருந்தினர் அந்தக் கட்டிலை விட நீளமாக இருந்தார் என்று வைத்துக் கொள்ளுங்க... கட்டிலுக்குத் தகுந்தாற் போல் காலை வெட்டி விடச் சொல்வார்.

ஏனெனில் அந்தக் கட்டில் விலையுயர்ந்தது. அதைமாற்ற முடியாது. அதனால கட்டிலுக்குத் தகுந்த மாதிரி ஆளை மாற்றி விடுவார். அங்கே கட்டில் தான் முக்கியம். மனிதன் முக்கியமில்லை. அப்படித்தான் பல சமயங்களில் நமக்கு வாழ்வு முக்கியமாகத் தெரிவதில்லை. சட்டதிட்டங்கள் தான் முக்கியமாகத் தெரிகிறது.

பொதுவாக ஒரு அளவை வைத்துத்தான் கட்டில் தயார் பண்ண முடியும்.

ஒரு சராசரி மனிதனின் அளவு அது. சராசரி என்பது உதாரணத் துக்கு... பத்துப்பேர் உயரத்தைக் கூட்டி பத்தால் வகுத்து வரும் எண் கணக்கின் ஒரு கற்பனை வடிவம் அது.

அந்த வகையில் தான் அந்தக் கட்டில் தயார் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் சராசரி உயரமுள்ள மனிதன் என்பது கணக்கில் வேண்டு மானால் இருக்கலாம்.

நடைமுறையில் இருக்க முடியாது. அது கணக்கில் ஏற்பட்ட ஒரு கற்பனை அளவு. அந்தக் கற்பனை அளவுக்கு நூறு சதவீதம் "கரெக்டா" ஒரு விருந்தாளி வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியா?

சரி!

அந்தக் கட்டிலை விட நீளம் குறைவாக அதாவது உயரம் குறைவான ஒரு ஆசாமி வந்து விடுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பவும் அந்தராஜா சும்மா இருக்கமாட்டார். அதுக்கென்றே அரண் மனையில் சில பலசாலிகளை வைத்திருக்கிறார். அவர்களைக் கூப்பிட்டு வந்த விருந்தாளியைக் காட்டி விடுவார்.

தலைப்பக்கம் நான்குபேர்– கால் பக்கம் நான்கு பேர்– அவரைப் பிடித்து... பலங்கொண்ட மட்டும் இழுக்கச் சொல்லுவார்.

கட்டில் அளவுக்கு கரெக்டா பொருந்துற அளவுக்கு நீட்டச் சொல்லுவார். உடம்பு என்ன கம்பியா.. தட்டி நீட்டுவதற்கு? வரும் விருந்தினர் நல்ல முறையில் படுத்து ஆனந்தப் படவேண்டும் என்று தான் அந்த ராஜா நினைக்கிறார்.

ஆனால் கட்டிலுக்குத் தகுந்த மாதிரி அவருடைய நீளம் இருக்க வேண்டும் என நினைப்பதனால் எவ்வளவு இடைஞ்சல்.

இது அரசனின் தவறில்லை. ஒழுங்கு முறையின் தவறு என்கிறார் ஓஷோ.

வாழ்க்கையை நெறிப்படுத்துவதென்பது வேறு. கட்டுப் படுத்து வதென்பது வேறு. ஒழுங்கு முறையைத் திணிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு பலபேர் வாழ்வையே இழந்து விடுகிறார்கள். வாழ்வின் இயல்பு ஆனந்தம்... மகிழ்ச்சி! அந்த மகிழ்வை அடைய வேண்டுமானால் திறந்த மனதுடன் செயற்பட வேண்டும்.

இது தெரியாததனால் நம்மில் பலர் வாழ்க்கையின் முக்கியமான சில பகுதிகளை இழந்துவிடுகிறோம். நம்மில் சிலபேர் வேறுமாதிரி.

ஒரு ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை நடந்து முடிந்தது. அதன்பின் மருத்துவதாதியொருவர் அவசரமாக ஓடிவந்து, " டாக்டர் இந்த பேஷன்டுக்கு காலில் தான் கட்டி. ஆனால் நீங்கள் மூளையில் கட்டி என்று நினைத்து ஆபரேஷன் செய்து விட்டீர்கள். மூளையில் ஆபரேஷன் பண்ண வேண்டிய நோயாளி 15 ஆம் நம்பர் பெட்டில் இருக்கிறார்" என்றார்.

டாக்டர் பார்த்தார்..." பரவாயில்லை. அதனால் என்ன... கட்டிலை மாற்றிவிட்டால் போச்சு!

இவரைக் கொண்டு போய் 15 ஆம் நம்பர் பெட்டில் போட்டு விடு. சரியாக போய்விடும்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் வெசாக் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

சமூகங்களுக்கிடையிலான ஐக்கியத்தை யும் பரஸ்பர நல்லுணர்வையும் வளர்த்தெடுக் கும் முகமாக யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையகம் எதிர்வரும் 27,28 , 29,30 ஆம் திகதிகளில் யாழ். நகரில் வெசாக் பெருவிழா ஒன்றினை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இதில் யாழ்.கோட்டை, பொதுநூலகம், துரையப்பா விளையாட்டரங்கு என்பவற்றை உள்ளடக்கியதாக வெசாக் கூடுகள், அழகான பந்தல்கள், தானசாலைகள் அமைக்கப்பட்டு வருவதுடன் இந்த தானசாலைகளில் இலவச உணவு வழங்கப்படும் எனவும் பக்தி கீதங்கள் ஒலிக்கப்படும் எனவும் யாழ். படை த்தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## பிரதேச செயலகங்களுக்கிடையிலான பூப்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக் கிடையே நடைபெறும் பூப்பந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஆண்களுக்கான போட்டி சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் பெண்களுக்கான போட்டி சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளது.

பங்குபற்றும் சகல பிரதேச செயலக அணிகளும் இன்று காலை 8 மணிக்கு சமூகம் தந்து தமது பதிவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எப்.ஜே. ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (6-30)

## யாழ்.முகாமைத்துவ சம்மேளனத்தின் விசேட பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ். முகாமைத்துவ சம்மேளனத்தினால் நடத்தப்படும் "தனிமனிதனிற்கேயுரிய சமூக மதிப்பீடுகள், கடமை, பொறுப்பு, பண்பு" என்னும் விடயம் பற்றிய விசேட பயிற்சிப் பட்டறை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி முதல் 6 மணிவரை இல.17 ,பருத்தித் துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள யூரோ வில் மாநாட்டு மண்டபத்தில் மக்கள் வங்கி யின் யாழ். மாவட்ட உதவிப் பொது முகாமை யாளர் கே. ஆனந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரம்மகுமாரிஸ் ராஜயோக நிலையத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பி.கே. கணேஸ் கலந்து கொள்ளவுள்ளார். (4)

## இராசி பலன்

*22.05.2010*
*(வைகாசி 8 ,சனிக்கிழமை)*
*நவமி பிற்பகல் 2.19 மணிவரை*
*பூரம் பிற்பகல் 4.52 மணிவரை*
*இராகுகாலம் 8.52-10.22 மணிவரை*
*சுபநேரம் 2.52-4.22 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | குடும்பக் கவலை, வேலைச்சுமை , போசன சுகம் ,காரிய தாமதம். |
| இடபம் | மாதா சுகம் ,மனச்சஞ்சலம், ரோக நிலை ,அதிகபிரயாசை. |
| மிதுனம் | சகோதரர் வழி, நன்மை, இஷ்ட சித்தி, நற்கீர்த்தி, மனோதைரியம். |
| கடகம் | மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, தொழில் நன்மை, முயற்சி தாமதம். |
| சிங்கம் | வெகுமானம், விருந்துபசாரம், நல்ல முயற்சி, மாதர் நட்பு. |
| கன்னி | சோம்பல் நிலை, காரிய தாமதம், உறவினர் சந்திப்பு, சயனசுகக் குறைவு. |
| துலாம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, தேகநலன், காரிய நன் மை. |
| விருச்சிகம் | தொழில் மேன்மை, எடுத்த காரியம் கைகூடும், இனிய தகவல், பிறர் உதவி. |
| தனுசு | வேலைச்சுமை, பிரயாண நன்மை, உடல் நலக்குறைவு, கட்டுப்பாடு. |
| மகரம் | எதிரிகள் தொல்லை, முயற்சி தாமதம், தனவிரயம், போசன சுகம். |
| கும்பம் | மனோதைரியம், குடும்ப மகிழ்ச்சி, செல்வாக்கு,-- போசன நன்மை. |
| மீனம் | இனிய சம்பவம், காரிய அனுகூலம், நோய் குணமடைதல், பெரியோர் உதவி. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 110 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 95 |
| தக்காளி | 80 | 90 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 45 |
| கோவா | 80 | 90 | 80 |
| கரட் | 120 | 140 | 120 |
| பூசணி | 30 | 40 | 35 |
| புடோல் | 50 | 60 | 65 |
| வாழைக்காய் | 30 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 65 |
| பாகற்காய் | 80 | 90 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 45 |
| பயிற்றங்காய் | 90 | 100 | 80 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 75 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 220 |
| போஞ்சி | 100 | 120 | 130 |
| கத்தரிதம்புள்ள | 80 | 90 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 50 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |







சாவகச்சேரி பிரதேச சபையினால் கைதடி பொதுநூலகத்தில் நடைபெற்ற உலக புத்தக தின நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசை நூலக அபிவிருத்தி சபை பொருளாளரும் அதிபருமான எஸ்.பேரின்பநாதன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியர் வே.க.சந்திரகுமார் உரையாற்றுவதையும், அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்,சிறுமியரையும் படங்களில் காணலாம்.

## குணமாக்கல் வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இராசாவின் தோட்டம், நாவலர் வீதியில் அமைந்துள்ள பெத்தேல் சபையினால் நடத்தப்படும் குணமாக்கல் வழிபாடு எதிர்வரும் 27,28,29 ஆகிய திகதிகளில் பிற்பகல் 4மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கலாசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் வே. கா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் லயன். வைத்திய கலாநிதி வை.தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (4)

## விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் தொழில்வாய்ப்புக்களை உடையதும் வெளிநாடுகளில் சட்டரீதியான புலமையாளர் குடிவரவிற்கான தகைமையைத்தரும் CIMA கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள கோரப்பட்டுள்ளது.

இக் கற்கைநெறியை 16 வயதுக்கு மேற்பட்டோர் யாவரும் கற்கமுடியும் எனவும் AAT, CBA,HNDA,B.COM,BBA தகைமையுடையோர் பாடவிலக்கு பெறமுடியும் எனவும் ஏற்கனவே பாடவிலக்கிற்கு விண்ணப்பித் தோரும் புதிதாக விண்ணப்பிப் போரும் நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் இல 324, பரமேஸ்வராச்சந்தி, பலாலி வீதியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில்நுட்ப வளாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (4)

## கணனி பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

கணனிசார் பிரச்சினைகள், வைரஸ் பாதுகாப்பு உள்ளடக்கியதும் இத்துறையில் பெருமளவு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்புக்களை உடையதுமான மைக்ரோசொப்ற் கணனி தொழில்நுட்பவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 27,28,29,30 ஆகிய நாட்களில் 324,பலாலிவீதி, பரமேஸ்வராச்சந்தியில் அமைந்துள்ள MCS தகவல் தொழில்நுட்ப வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறை மைக்ரோசொப்ற் கணனிப் பொறியிலாளர்களால் நடத்தப்படவுள்ளதுடன் பயிற்சியின் முடிவில் மைக்ரோசொப்ற் நிறுவனத்தால் பரீட்சிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

இப் பயிற்சிப்பட்டறைக்கு விண்ணப்பிப்போர் நாளை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் வளாகத்தில் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## வடமராட்சியில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டால் பாவனையாளர்கள் விசனம்

(பருத்தித்துறை)

வடமராட்சியில் மின்சாரத் தடையால் மின்பாவனையாளர் தினமும் பெரும் துன்பத்தை அனுபவிப்பதாக தெரிவிக்கின்றனர்.

.மின்சாரம் அப்பகுதி மக்களை சிரமத்தில் ஆழ்த்தி வருகிறது. மின்சாரத் தடை நேர காலமின்றி முன்னறிவித்தலின்றி திடீர் திடீரென பகல் இரவு என பாராமல் தடைப்படுவதால் மக்கள் விசனமடைகின்றனர்.

சில சமயங்களில் தொடர்ந்து இரண்டு மணித்தியாலங்கள் மின்வெட்டு செய்யப்பட்டு பின்னர் மின் வழங்கப்படுகிறது.

உடனடியாக அரை மணிநேரத்தில் மின்சாரம் மீண்டும் தடைப்படுகிறது. இது ஒரு வகையில் மக்களுக்கு மின்சாரம் சவால் விடுவது போன்றிருப்பதாகவும் மின் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுமட்டுமல்லல அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் மின் உபகரணங்களும் முற்றாக செயலிழந்து போவதாகவும் தெரிவிக்கின்றனர்.எனவே மின்சாரத்தினால் மக்கள் படும் துயரத்தைப் போக்க உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கையை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-10)

## சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிய இருவருக்கு ரூ.ஒரு இலட்சம் அபராதம்

(கரவெட்டி)

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் அனுமதிபத்திரமில்லாமல் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றியமை தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கடந்த 02.05.2010 அன்று அனுமதியில்லாமல் மணல் ஏற்றியபோது பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப் --பட்டனர். கைது செய்யப்பட்ட இரண்டு நபர்களும் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். விசாரணையின் போது குற்றத்தை ஒப்புக்கொண்ட இரண்டு குற்றவாளிகளுக்கும் ஒரு இலட்சம் ரூபா அபராதமும் 3மாத கால சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது. அத்துடன் அபராதம் செலுத்தத் தவறின் மேலும் 1 வருட கால சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார். (9-24)

## ஸ்பேஸ் றொக்கெட் கழகத்தின் ஏற்பாட்டில் விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மவுண்ட் லவீனியா ஸ்பேஸ் றொக்கெட் விளையாட்டுக் கழகத்தினால் இன்று காலை 6 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் மரதன் ஓட்டம், வேகநடைப் போட்டி, புதுமுக வீரர்களுக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டம், 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான துவிச்சக்கரவண்டி ஓட்டம் போன்ற போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆண்களுக்கான 130 கிலோமீற்றர் துவிச்சக்கரவண்டி ஓட்டம் , பெண்களுக்கான 30 கிலோமீற்றர் துவிச்சக்கரவண்டிஓட்டம் என்பன நடத்தப்படவுள்ளன. (6)

## மேசைப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெறவுள்ள ஆண், பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப்போட்டி நாளை ஞாயிறு காலை 8.30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது. அன்றைய தினம் சகல பிரதேச செயலக அணிகளும் குறித்த நேரத் திற்கு முன்னதாக வருகை தந்து பதிவினை மேற்கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எப்.ஜே.ரூபசிங்கம் அறிவித்துள்ளார். (2-30)

## சுதேச விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியால் வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் சுதேச விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியின் விளையாட்டரங்கில் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப்பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4)

## கரப்பந்தாட்ட பயிற்சிப் பட்டறை பிற்போடப்பட்டுள்ளது

எதிர்வரும் 24,25 ஆம்திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்த கரப்பந்தாட்ட பயிற்சிப் பட்டறை தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் யூன் மாதம் முதலாம்,இரண்டாம் திகதிகளில் காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்றும் இதுவரை காலமும் பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் சங்க செயலாள்ருடன் தொடர்புகொண்டு உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (6-4)

## கராத்தே சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கராத்தே சங்கம் நடத்தும் 2010 ஆம் ஆண்டிற்கான திறந்த கராத்தே சுற்றுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு கொழும்பு பேராசிரியர் மா.இரத்தினசோதி பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதுடன் கொழும்பு மத்தியஸ்தர் ஆர்.ஜே.அலெக்ஸ்சாண்டர் கௌரவ விருந்தினராகவும் கொழும்பு உதவிப் பேராசிரியர் குமரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (6-30)

## சமூக விஞ்ஞான பாடப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவிருந்த சமூக விஞ்ஞான பாடப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் யூன் மாதம் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6)

## நிர்வாக ஆளுகை சபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு பிரதேச செயலக ஆயுள்வேத பாதுகாப்பு சபையின் கருத்துக்கள் நிகழ்வும், நிர்வாக ஆளுகைச் சபைக்கூட்டமும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற் பகல் 4.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள அரச ஆயுள்வேத மத்திய மருந்தக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக ஆயுள் வேத பாதுகாப்புச் சபை செயலாளர் டாக்டர் வெ.சக்திவேல் அறிவித்துள்ளார். (4-17)




## அதிபர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மத்திய கல்வி அமைச்சினால் அறிவூட்டல் செயலமர்வு ஒன்று யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

இச் செயலமர்வில் தரம் 1AB, 1C, வகைII பாடசாலை அதிபர்கள் யாவரும் பங்குபற்று றாறு யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (6)

# இணையத்தில் தோற்கும் மைக்ரோசொப்ட்

கணனித் தொழில்நுட்பங்கள் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே இருக்கின்றன. இன்றைக்கு இருக்கும் தொழில்நுட்பம் இன்னும் எவ்வளவு காலத்துக்குக் காலாவதியாகாமல் இருக்கும் என்பதைக் கணிகக்கூட முடியாத அளவுக்கு இந்த மாற்றங்கள் வேகம் பிடித்திருக்கின்றன.மாற்றங்களைத் தாங்காத சில தொழில் நுட்பங்கள் நாள் கணக்கிலேயே காணாமல் போய்விடுகின்றன. மாற்றங்களை உள்வாங்கிக்கொள்ளும் தொழில் நுட்பங்களுக்கு ஆயுள் அதிகமாக இருக்கிறது.

இதையெல்லாம் சரியாகக் கணித்து தொழில் உத்திகளை வகுத்துக் கொள்ளும் நிறுவனங்கள்தான் தொழில்நுட்பத் துறையில் நீடித்திருக்கின்றன. அப்படியொரு தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய நுணுக்கங்களைக் கொண்டிருக்கும். நிறுவனம் தான் மைக்ரோசொப்ட்.

தொழில் தந்திரங்களை வகுத்துக் கொள்வதில் மைக்ரோசொப்டின் பாணி வியக்கத்தக்கது. ஒரு மென்பொருளை விற்கும்போது, அதனை சுற்றிய வேறு பல மென்பொருட்களையும் திணித்துவிடுவது தான் மைக்ரோசொப்டின் வழக்கம். அப்படித் திணிக்கப்பட்ட ஒரு மென்பொருள்தான் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர்.

கணனி வழியாக இணையத்தளத்துக்குள் நுழைவதற்கான இணைய உலவி இது. இயக்க அமைப்பு மென்பொருள் சந்தையில் 90 சதவீதத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் மைக்ரோசொப்ட் தனது விண்டோஸ் இயக்க அமைப்புடன் இன்டர்நெட் எக்ஸ்புளோரையும் நுழைத்துவிடுகிறது. இதனால்,இணையத்தளத்தை தொடர்புகொள்ள வேண்டுமானால், இன்டர்நெட் எக்ஸ்புளோரரைப் பயன்படுத்த வேண்டும் என்பதே சில ஆண்டுகளுக்கு முன்பு வரை எழுதப்படாத விதியாக இருந்தது.

அதாவது இணையம் என்பதும் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் என்பதும் வெவ்வேறல்ல என்பது போன்ற மாயை இருந்தது. இணையத்தில் கரைகண்டவர்கள்தான் வேறு வகையான உதவிகளைப் பற்றித் தெரிந்து வைத்திருந்தார்கள்.

தொழில் தந்திரங்களின் மூலம் முன்னணியிலிருந்த நெட்ஸ்கேப் நேவிகேட்டர் போன்ற உலவிகளைப் பின்னுக்குத் தள்ளியது மைக்ரோசொப்ட். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் 95 சதவீதம் பேருக்கு இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரரைத் தவிர வேறு எந்த உலவியையும் பயன்படுத்தும் தெளிவில்லை என்று ஆய்வுகள் கூறின.

ஆனால் கணனித் தொழில்நுட்ப உலகின் காலச்சக்கரம் நிபுணர்களின் கணிப்பை விடவும் மிக வேகமாகச் சுழல்கிறது. ஆறேழு ஆண்டுகளுக்கு முன்பு வரை கணனி மென்பொருள் உலகில் ஏகபோகமாக இருந்த மைக்ரோசொப்டுக்கு ஐரோப்பிய யூனியன் வடிவில் சோதனை வந்தது.

உலகின் மற்ற பகுதிகளெல்லாம் மைக்ரோசொப்ட் கொடுப்பதை கேள்விகேட்காமல் வாங்கிக் கொண்டிருந்த நிலையில், மீடியா ப்ளேயர், இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் போன்றவற்றை விண்டோஸுடன் இணைத்துக் கொடுப்பது பற்றி ஐரோப்பிய யூனியன் சந்தேகம் எழுப்பியது.

மற்ற நிறுவனங்களின் மென்பொருள்களைப் பற்றி வாடிக்கையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே இந்தச் செருகல் உத்தியை மைக்ரோசொப்ட் பயன்படுத்துவதாகக் குற்றம்சாட்டப்பட்டது. இதனால்,மீடியா ப்ளேயர் இல்லாத விண்டோஸ் இயக்க அமைப்பை ஐரோப்பிய யூனியனுக்காகத் தயாரித்து வழங்க வேண்டியதாயிற்று.

பல ஆயிரம் கோடி அபராதம் வேறு. மைக்ரோசொப்டின் வியாபாரத் தந்திரத்துக்கு வைக்கப்பட்ட அதிரடியான முதல் குட்டு இதுதான்.

கடந்த ஆண்டு இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரருக்கும் சோதனைவந்தது. கூகுள் க்ரோம், பயர்ஃபொக்ஸ் போன்ற உதவிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில், இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் இல்லாத விண்டோஸை வழங்குமாறு மைக்ரோசொப்டுக்கு உத்தரவிடப்பட்டது. அதன்படி விண்டோஸ் -7 ஐரோப்பிய பதிப்பில் மட்டும் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் கிடையாது. தேவைப்படுவோர் இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

கடந்த சில ஆண்டுகளாகவே போட்டி உதவிகளால் வீழ்ச்சியைச் சந்தித்துக் கொண்டிருந்த இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரருக்கு ஐரோப்பிய யூனியனின் முடிவு பேரிடியாக அமைந்துவிட்டது. அண்மையில் வெளியான கணிப்புப் படி, உலக அளவில் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரரைப் பயன்படுத்துவோரின் அளவு 60 சதவீதத்துக்கும் கீழே சரிந்திருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

அதேநேரத்தில் பயர்பொக்ஸ் மற்றும் கூகுள் க்ரோம் ஆகியவை முறையே சுமார் 25 மற்றும் சுமார் 10 சதவீத பயனாளர்களை ஈர்த்திருக்கின்றன. இது அதிரடியான மாற்றம்.

இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரரின் வீழ்ச்சிக்கு,பாதுகாப்புக்குறைபாடு ஒரு முக்கிய காரணமாகும். இதுதவிர, அலட்சியம் காரணமாக மேம்பாட்டுப் பணிகளுக்குக் குறைந்த அளவு நிதி ஒதுக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இதனால்,நாள்தோறும் புதுமைகளைப் புகுத்திவரும் பயர்பொக்ஸ் மற்றும் க்ரோம் ஆகியவற்றைத் தேடி விபரம் தெரிந்தவர்கள் செல்லத் தொடங்கிவிட்டனர்.

இதேவேகத்தில் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரரின் வீழ்ச்சி தொடருமானால், இன்னும் ஆறேழு ஆண்டுகளில் நெட்ஸ்கேப் நேவிகேட்டர் போல முற்றிலுமாக ஒழிந்துவிடும் என நிபுணர்கள் கணித்திருக்கிறார்கள்.

ஆனால், இந்த விவரமெல்லாம் மைக்ரோசொப்ட்டுக்குத் தெரியாதவையல்ல. தோற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொண்டிருக்கும் அந்நிறுவனம், அதிருப்தியில் இருக்கும் வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் - 9 பதிப்பை எச்டிஎம்எல் 5 என்கிற வெகுநவீனத் தொழில்நுட்ப வசதியுடன் வெளியிட இருப்பதாக அறிவித்திருக்கிறது.

ப்ளாஷ்வீடியோவுக்கு மாற்றாக இந்தத் தொழில்நுட்பம் இருக்கும் என்பதால் ,மக்கள் மீண்டும் இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரருக்குத் திரும்புவார்கள் என மைக்ரோசொப்ட் நம்புகிறது. இது ஒருவேளை ஓரளவு சாத்தியமாகலாம். ஆனால், இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்ததைப் போல ஏகபோகம் என்பதெல்லாம் நடக்காது.

நன்றி:இணையம்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான குழுவினர் கேரள மாநிலத்திற்கு விஜயம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் கிழக்கு மாகாண அமைச்சர்கள், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் இந்தியாவின் கேரளா மாநிலத்திற்குச் செல்லவுள்ளனர்.

முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையில் கேரளா மாநிலத்திற்கு இவர்கள் செல்லவுள்ளனர்.

மூன்று குழுக்களாகச் செல்லும் இவர்களில் அடுத்த மாதம் 6 ஆம் திகதி முதலமைச்சர் தலைமையிலான குழுவும் 12 ஆம் திகதி இரண்டாவது குழுவும் 20 ஆம் திகதி மூன்றாவது குழுவுமாக செல்லவுள்ளனர்.

ஐந்து நாட்கள் களப்பயணம் மேற்கொள்ளும் இவர்கள் கேரளா மாநிலத்தின் நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் ஏனைய விடயங்களைப் பார்வையிடவுள்ளனர்.

அங்குள்ள விடயங்களை பார்வையிட்டு கிழக்கு மாகாண சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இவர்களின் கேரளா விஜயம் இடம் பெறவுள்ளது. (6)

## மோசமான காலநிலையால் பாதிப்புற்றோருக்கு அமெரிக்கா ஆறு மில்லியன் ரூபா நிதியுதவி

(கொழும்பு)

நாட்டில் நிலவிவரும் மோசமான காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் முன் வந்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் பெற்றீசியா புதெனிஸ் அவசர பிரகடனம் ஒன்றை விடுத்துள்ளார். இதன் பிரகாரம் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களை (6 மில்லியன் ரூபா) மனிதாபிமான நடவடிக்கைகளுக் காக அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிலையம் வழங்கியுள்ளது.


பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றுவதற்கென பணியாளர்களைத் தந்துதவு மாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அமெரிக்கத் தூதுவராலயத்தைக் கேட்டுள்ளது.

அந்நாட்டில் சர்வதேச அனர்த்த நிவாரண உதவிப் பணிப்பாளர்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகியவற்றுடன் சங்கம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகியவற்றுடன் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ வசதி கூடாரங்கள், குடிநீர், உணவு போன்ற நிவாரண உதவிகளை வழங்கவுள்ளனர்.

நாட்டில் நிலவும் மோசமான காலநிலை காரணமாக பலர் இடம்பெயர்ந்தும் தமது உடைமைகளை இழந்துமுள்ளனர். இது வரை 24 பேர் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

ஐ.தே.கவின் தலைவரை

## வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்வதில் தமக்கு ஆட்சேபனை இல்லை - ரணில்



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவிக்கான நபரை வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்வது தொடர்பில் தமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு தெரிவு செய்யப்படும் தலைவருக்கு தனது அரசியல் கொள்கை செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தவும் தகுதியானவர்களை கட்சியின் உயர் பதவி களுக்கு நியமிப்பதற்கான அதிகாரம் வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு குழுவிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கட்சி மறுசீரமைப்பு தொடர்பான யோசனைகளை முன்வைக்கும் நோக்கில் நியமிக்கப்பட்ட குழு தமது அறிக்கையை கட்சித் தலைவரிடம் நேற்று முன்தினம் அந்த அறிக்கையை ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளது.இதன் போதே ரணில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேவேளை தவிசாளர், பொதுச்செயலாளர் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் பதவிகளுக்கான நபர்களை கட்சி உறுப்பினர்களின் வாக்குகள் மூலம் தெரிவு செய்ய ஐக்கிய தேசியக் கட்சியின்செயற்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக மறுசீரமைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

கட்சி தலைவரை செயற்குழு உறுப்பினர்கள் மத்தியில் நடத்தப்படும் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தமுடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. (2-6)

## சிறப்புச்சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இவ் உற்சவ காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்து சிறப்புச் சொற் பொழிவாற்றி வரும் திருத்தொண்டர் மாமணி, பேராசிரியர் சிவகுமார் இன்றைய தினம் மாலை 5 மணிக்கு திருமூல தேவநாயனார் எனும் விடயம் பற்றியும் நாளை கண்ணப்ப நாயனார் எனும் விடயம் பற்றியும் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (6)








தென்னாபிரிக்க கேப்டவுண் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற மிலேனியம் மேம்பாட்டு இலக்கு என்னும் தலைப்பில் பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் தென்னாபிரிக்க துணை அதிபர் கஜலிமா மொட்லாந்தி உரையாற்றுவதையும், அருகில் பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழக செயலாளர் ஜோன்டரண்ட் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், மாநாட்டில் கலந்துகொண்ட பேராசிரியர் ஜோ பியெல், றுவாண்டா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிலாஸ் லுவாகம்பா, சிம்பாப்வே பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் லிண்டேலா நட்லோ, பெரதெனிய பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சரத் பண்டார அபயக்கோன்,வெஸ்ரென் கேப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ப்ரெய்ன் ஓ கொனொல் ஆகியோரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# 2010 ஆம் ஆண்டுக்கான அரச செலவு

# ஆயிரத்து 780 மில்லியன் ரூபா

## ஊடக அமைச்சர் தகவல்



(கொழும்பு)

2010 ஆம் ஆண்டுக்கான அரச செலவு ஆயிரத்து 780 மில்லியன் ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள மினி வரவு -செலவுத் திட்டம் தொடர்பில் ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தகவல் வெளியிட்டபோது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த நிதியை ஒதுக்குவதற்காக நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவிருக்கும் இடைக்கால கணக்கு அறிக்கைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த இடைக்கால கணக்கறிக்கை தொடர்பான ஆவணத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.


வரவு செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் ஜூன் மாதம் 29 ஆம்திகதி நடைபெறவுள்ளதாகவும், இரண்டாம் வாசிப்பு 30 ஆம் திகதி முதல் ஜூலை 3 ஆம் திகதி வரையிலும், மூன்றாம் வாசிப்பு ஜூலை மாதம் 5 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரையில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

இந்த வருடத்தில் முதல் நான்கு மாதங்களுக்கு அரச செலவுகளுக்காக இடைக்கால கணக்கறிக்கை ஒன்றின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டதுடன் அந்த நான்கு மாத காலம் கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. அன்றைய தினத்திலிருந்து எதிர்வரும் ஜூலை 22 ஆம்திகதிவரை அரசாங்க செலவு களுக்காக அரச கூட்டு நிதியத்திலிருந்து ஜனாதிபதி நிதியை ஒதுக்கியிருந்தார்.

இந்த வருடத்தில் செலவிட்டுள்ள நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த இடைக்கால கணக்கறிக்கையின் மூலம் அனுமதி கோரப்பட்டுள்ளதாக கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார். (2-6)

# புகையிரத இயந்திரம் மோதி விபத்து-சாரதி பதவி நீக்கம்

## திருமலையில் சம்பவம்



திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி புறப்படவிருந்த அஞ்சல் புகையிரதப் பெட்டிகள் மீது அதே புகையிரத இயந்திரம் மோதியதில் ஒரு பெட்டி முழுமையாக சேதமடைந்தது.மேலும் அந்தப் புகையிரதத்தின் ஆறு பெட்டிகள் சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

திருகோணமலை புகையிரத நிலையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 3.20 மணிக்கு புகையிரதப் பெட்டிகளை இணைக்கும் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த பொழுது, புகையிரத இயந்திரத்தை செலுத்திச் சென்ற சாரதியின் கட்டுப்பாட்டை மீறிப் பெட்டிகள் மீது இயந்திரம் மோதியுள்ளது.

கொழும்பு நோக்கி புறப்படவிருந்த அஞ்சல் புகையிரதப் பெட்டிகள் மீது, இயந்திரம் மோதியுள்ளது.அதன் காரணமாக புகையிரதத்தின் ஒரு பெட்டி முழுமையாக சேதமடைந்தது. மேலும் அந்தப் புகையிரத த்தின் ஆறு பெட்டிகள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புகையிரத விபத்து தொடர்பில், குறித்த புகையிரதத்தைச் செலுத்திய சாரதி பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.ஏனெனில் குறித்த சாரதி மது போதையில் இருந்ததன் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் புகையிரதத்தின் இயந்திரத்தை திசை திருப்பி பெட்டிகளின் மறுமுனையில் பொருத்த முற்படும் போது மிகவும் வேகமாகச் சென்று குறித்த புகையிரதத்துடன் மோதச் செய்துள்ளார்.

இதன் காரணமாக பல கோடி ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், இவ் விபத்து குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-6)

# பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொள்ளை சந்தேக நபர் பலி

## இரத்தினபுரியில் சம்பவம்

(கொழும்பு)

பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் சந்தேக நபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.குறித்த சந்தேக நபர் ரில்லாகேன தோட்ப் பிரதேசத்தில் மறைந்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து, கஹாவத்த பொலிஸார் நடத்திய சோதனை நடவடிக்கையின் போது இந்தத் துப்பாக்கி சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும் பதில் தாக்குதல் நடத்திய போது குறித்த நபர் உயிரிழந்ததாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இவர் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக்கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தே நபரிடமிருந்து நான்கு இலட்ச ரூபா பணமும் ஒரு கைத்துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளது. (2-6)

# வெள்ளம் ஏற்படுவதை தடுக்க நீண்டகால செயற்றிட்டம்

## அமைச்சர் பௌஸி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பெரு வெள்ளம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக நீண்டகாலத் திட்டமொன்று மேற்கொள்ளப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,


வெள்ளம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒக்டோபர் மாதத்தில் அடுத்த மழை தொடங்குவதற்கு முன்னர் கால்வாய்களை திருத்தவும் அவற்றை நிர்வகிக்கவும் உள்ளோம்.

கால்வாய்களுக்கு அருகில் உள்ளவர்களை தற்காலிக இடங்களுக்கு அகற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. அவைகளைத் திருத்த பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டாலும் நிர்வகிக்கப்படாததால் வெள்ளம் வடி வதில் சிக்கல் ஏற்படுகிறது.

இலங்கை க்கு அருகில் நிலைகொண்டுள்ள லைலா சூறாவளியி னால் இலங்கைக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் சூறாவளி நிலைமை குறித்து நாம் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்.

தற்பொழுது இரத்தினபுரிநில்வள கங்கை, களுகங்கை என்பவற்றின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி மழை பெய்யத் தொடங்கியதும் ஆறுகள் பெருக்கெடுத்து வெள்ள அபாயம் அதிகரிக்கலாம்.



வெள்ளநீர் வடிந்து செல்வதற்காக வடிகால் கட்டமைப்புகளை சுத்திகரிக்கவும் நீர் வடிந்து செல்வதற்கு தடையாக அமைக்கப் பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.புதிதாக வடிகால்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார். (2-6)

# விஷேட மாநாடு

சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற இஸ்லாமிய மார்க்க அறிஞர் டாக்டர் ஸாகிர் நாயக் பங்கேற்கும் விசேட மாநாடு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு சுகததாஸ அரங்கில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 6 மணிமுதல் 9.30 மணிவரை நடைபெறவுள்ள இம் மாநாட்டில் மதங்களுக்கு ஊடான சமாதானம் எனும் தலைப்பில், டாக்டர் ஸாகிர் நாயகம் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

இலங்கை ஜம்இய்யதுஷ் ஷபாப் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இம் மாபெரும் மாநாட்டில் சர்வமதத் தலைவர்கள், அரசியல்வாதிகள், பிரமுகர்கள் உட்பட பெருந் திரளானோர் கலந்துகொள்ள வுள்ளனர். இந் நிகழ்வில் கலந்துகொண்டு சமாதானத்தை யும் சக வாழ்வையும் தோற்றுவிப்பதற்கு துணைபுரியுமாறு ஏற்பாட்டாளர்கள் பொது மக்களை வேண்டிக்கொள் கின்றனர். (2-6)

# 40 வருடங்களாக தமிழ் மக்கள் படும் துன்ப,துயரங்களை களைய வேண்டும்

## சுவாமிநாதன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து அரசியல் பேதங்களையும் மறந்து வடபகுதி தமிழ் மக்களின் வளமான வாழ்வுக்காக பாராளுமன்றத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் அனைத்து தமிழ்ப் பிரதி நிதிகளும் ஓரணியில் திரள வேண்டும் என் ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் திருப்திகரமானதாக இல்லையென்றும் அவர் குற்றம் சாட்டினார்.

கொழும்பில் எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே டி.எம். சுவாமிநாதன் எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

யுத்தம் முடிந்து ஒரு வருட காலம் முடிவடைந்த போதும் வட பகுதி மக்களை அரசாங்கம் மீள் குடியேற்றவில்லை.

இதுவரையில் 62 ஆயிரத்து 944 பேரை மீள்குடியேற்றம் செய்துள்ள அரசாங்கம் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையோ வீடுகளையோ அமைத்துக் கொடுக்கவில்லை. வெறுமனே கொட்டில்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மன்னார் பிரதேசங்களில் உள்ள 300 பாடசாலைகளில் 196 பாடசாலைகளே இயங்குகின்றன. ஏனைய பாடசாலைகள் முடங்கிப்போயுள்ளன. 86 ஆயிரம் பாடசாலை மாணவர்கள் உள்ளனர். இவர்களில் 26 ஆயிரம் பேரே பாடசாலை செல்கின்றனர். ஏனையோரின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இத்தோடு பாடசாலைகளில் போதுமான வசதிகள் இல்லை. மேசை, கதிரைகள் இல்லை. அடிப்படை வசதிகள் மோசமான நிலையில் உள்ளன.

வடபகுதி கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் பங்களிப்பு மிகக் குறைவாகவே உள்ளது. வன்னி மாவட்டத்தில் மொத்தமாக 60 ஆயிரத்து 690 வீடுகள் சேதமடைந்துள்ளன. முல்லைத்தீவில் சேதமடைந்த 28 ஆயிரம் வீடுகள் திருத்தப்படவில்லை.

இந்திய அரசாங்கம் 4 இலட்சம் சீமெந்து மூடைகளை வழங்கியுள்ளது. ஒரு வீட்டை கட்டுவதற்கு 8 மூடைகளே வழங்கப்படுகின்றன.

இது போதுமானதல்ல. எனவே இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி மேலதிகமாக சீமெந்து மூடைகளை மக்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் மற்றும் அரச மக்களுக்கு உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளன.

எனவே அவ்வுதவிகளை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றார். (2-6)

# மட்டக்களப்பில் மீளவும் சோதனை நடவடிக்கைகள்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பாதுகாப்பு படையினரால் சுற்றி வளைப்பு மற்றும் சோதனை செய்தல் நடவடிக்கைகள் மீளவும் தொடங்கப்பட்டுள்ளன.

கடந்த 17.05.2010 ஆம் திகதி களுவாஞ்சிக்குடி பொதுச்சந்தையை சுற்றி வளைத்த பாதுகாப்பு படையினர் அங்கிருந்த பெண்கள், பாடசாலை மாணவர்கள், முதியவர்கள் உட்பட சகலரையும் கடுமையான முறையில் சோதனை செய்தனர். இதனால் அன்று அந்த பிரதேசம் முழுவதும் பதட்டமாக காணப்பட்டதுடன் மக்கள் வீதிக்கு வருவதற்கு அச்சமடைந்தனர்.

போர் முடிந்து விட்டதாக கூறுகின்ற அரசாங்கம் ஏன் இவ்வாறான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என மக்கள் அங்கலாய்க்கின்றனர். (2-6)

# ஈழத்தில் தமிழர்களின் அழிவுக்கு காங்கிரஸ் கட்சியே காரணம்

## பா.ஜ.க.குற்றச்சாட்டு

இலங்கையில் தமிழ் சமுதாய அழிவுக்கு காரணம் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசுதான் என்று தமிழக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

இதுகுறித்து மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

இலங்கை பிரச்சினையை பயன்படுத்தி தேசவிரோத, மக்கள் விரோத அமைப்புகள் பயங்கரவாத இயக்கங்களை ஆரம்பிக்கும் சூழ்நிலை உள்ளது. இலங்கையில் தமிழ் சமுதாய அழிவுக்கு காரணம் காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசும் தி.மு.க. அரசும் தான்.

நக்சல்கள், மாவோயிஸ்ட்டுகளை வளர்த்து விட்டதும் காங்கிரஸ் கூட்டணிகள் தான். வரும் சட்டசபை தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழக அரசு வீழ்த்தப்பட வேண்டும். அதற்கு அனைத்து கட்சிகளும், சக்திகளும் ஒன்று சேரவேண்டும். கூட்டணிகள் குறித்து இப்போது எந்த முடிவும் செய்யவில்லை என்றார். (2-6)

# சம்பூர் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் இந்தியாவுக்கு 2 ஆயிரம் ஏக்கர் காணி

## மூதூர் நீதவானுக்கு அனுமதி மறுப்பு

சம்பூர் அதிஉயர்பாதுகாப்புவலயத்தில் உள்ள 2ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது உறுதியாகியுள்ளது.குறித்த அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் கடற்படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்த நிலையில், அந்த மரணம் தொடர்பான விசாரணைகளை நடத்தச் சென்ற மூதூர் நீதவானுக்கு அங்கு செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நீதியமைச்சரின் தலையீட்டை அடுத்தே நீதவான் அங்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். இலங்கை கடற்படையினரின் பாதுகாப்புடன் இந்தியத் தொழிலாளர்கள் மாத்திரமே மூதூர் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் பணியாற்றி வருகின்றனர்.

சம்பூர் பகுதியில் உள்ள ஆயிரத்து 200 ஏக்கர் விவசாய நிலம் மூதூரில் அமைக்கப்பட்டு வரும் அனல் நிலையத்தின் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுவரும் இந்திய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

அங்கு வாழ்ந்த மக்களுக்கு எவ்வித இழப்பீடுகளும் வழங்காது அந்த நிலங்கள் இந்திய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், நில உரிமையாளர்களான மக்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். (2-6)

# 22.05.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- கி.மு 334-மகா அலெக்சாண்டர் தலைமையில் கிரேக்க இராணுவம் பேர்சியாவின் மூன்றாம் டாரியஸ் மன்னனைத் தோற்கடித்தனர்.
- *1809*-வியென்னாவுக்கு அருகில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் முதற்தடவையாக தோற்கடிக்கப்பட்டன.
- *1834*-இலங்கையில் சட்ட சபையின் முதலாவது கூட்டம் கொழும்பில் இடம்பெற்றது.
- *1840*-நியூ சவுத் வேல்சுக்கு பிரித்தானியக் குற்றவாளிகளை நாடுகடத்தல் நிறுத்தப்பட்டது.
- *1844*-பாரசீக மதகுரு பாப் தனது பாபிசம் என்ற மதக்கொள்கையை வெளியிட்டார். இவரே பஹாய் சமயத்தை தோற்றுவித்த பகாவுல்லாவின் முன்னோடி எனக் கருதப்படுகிறது.
- *1906*-ரைட் சகோதரர்கள் தமது பறக்கும் கருவிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.
- *1915*-ஐக்கிய அமெரிக்காவில் லாசன் முனை வெடித்தது.
- *1915*-ஸ்கொட்லாந்தில் ஐந்து தொடரூந்துகள் ஒன்றோடொன்று மோதியதில் 227 பேர் கொல்லப்பட்டனர். 246 பேர் காயமடைந்தனர்.
- *1942*-இரண்டாம் உலகப்போர்: மெக்சிக்கோ நேச நாடுகள் தரப்பில் போரில் குதித்தது.
- *1958*- இலங்கை இனக்கலவரம்- இலங்கையில் ஏற்பட்ட கலவரங்களில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- *1960*- தெற்கு சிலியில் நிகழ்ந்த 9.5அளவு நிலநடுக்கம் மற்றும் ஆழிப்பேரலையினால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.இதுவே இதுவரையில் பதியப்பட்ட அதிசக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஆகும்.
- *1967*-பெல்ஜியம் தலைநகர் பிரசல்சில் கடைத்தொகுதி ஒன்று தீப்பிடித்ததில் 323 பேர் கொல்லப்பட்டு 150 பேர் காயமடைந்தனர்.
- *1968*-அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஸ்கோர்ப்பியன் மூழ்கியதில் 99 பேர் கொல்லப்பட்டனர்.
- *1990*-வடக்கு யேமன் மற்றும் தெற்கு யேமன் ஆகியன இணைந்து யேமன் குடியரசு ஆகியது.
- *1990*-விண்டோஸ் 3.0 வெளியிடப்பட்டது.
- *2004*-நெப்ராஸ்காவில் இடம்பெற்ற சூறாவளியினால் ஹலாம் நகரம் முற்றிலும் அழிந்தது.

### பிறப்புக்கள்


- *1859*-சேர் ஆர்தர் கொனன் டொயில், துப்பறியும் எழுத்தாளர்.(இ.1930)

### இறப்புக்கள்

- *1885*-விக்டர் ஹியூகோ, பிரெஞ்சு எழுத்தாளர் (பி.1802)

### சிறப்பு நாள்

- யேமன்-தேசிய நாள்
- இலங்கை-தேசிய வீரர்கள் நாள், குடியரசு நாள் (1972)
- *1972*-இலங்கையில் புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்து குடியரசு ஆகியது. சிலோன், ஸ்ரீலங்கா எனப் பெயர் மாற்றம் பெற்றது. பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் பெற்றது.



1958-இலங்கை இனக்கலவரம்-இலங்கையில் ஏற் பட்ட கலவரங்களில் நூற்றுக் கணக் கான தமிழர்கள் படுகொலை செய் யப்பட்டனர்.

# நெற்பீடைகளும் முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


### களைகள்

பீடைகளுள் இன்னொரு வகையாக களைகளைக் குறிப்பிடலாம். முதன்மைப் பயிருக்கு போட்டியாக பயிர்செய்யும் இடத்தில் தானாக வளரும் எந்தத் தாவரத்தையும் "களை" என்றே கருதுகிறோம்.களை என்னும் போது அது பல இடங்களில் பலவாறாக அர்த் தங்களைக் கொண்டிருந்தாலும் பயிர் விளையும் நிலத்தில் வளரும் போது அதனை "களை தல்" என்ற தேவை கருதிய செயற்பாட்டினுள் உள்ளடக்கப்படுகின்றது. எந்தத் தாவரமாயினும் முதன்மைப் பயிருக்கு குந்தகம் ஏற்படும் விதத்தில் வளருமாயின் அதனை அகற்றிவிட வேண்டும் என்பதையே இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

இதன் காரணமாகவே களைகளும் பீடைகள் என்னும் பொதுமைக் குறியீட்டுச் சொல்லினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆனால் இன்னுமொன்றையும் அவதானிக்க வேண்டும்.பொதுவாகவே களைகள் என விளிக்கும் தாவரங்கள் அனைத்தும் வெறுமனே வேண்டத்தக்காதன எனப் பொருள்படலாகாது. குறிப்பிட்ட தாவரமொன்றை எமது தேவைகருதி வளர்க்கும் போது அதனை "பயிர்" (Crop) என அழைக்கிறோம்.அந்தப் பயிருக்கு ஊறுவிளைவிப்பதாக அதனது வளர்ச்சியில், தேவையான கனிமங்களை அகத்துறுஞ்சுவதில் மேலும் அதனது விளைச்சலைப் பாதிப்பதில் முக்கிய பங்குவகிப்பதால்அவற்றை ''களைகள்'' (Weeds) என வரையறை செய்கிறோம்.

எம் மொழி செம்மொழிக்கு அப்படியொரு சிறப்பு. களை என்பதன் பல்வேறு அர்த்தங்களை கீழுள்ள வாக்கியத்தில் காண முடிகின்றதா? முயற்சியுங்கள் பார்க்கலாம். "களை களை களைந்து களைத்துவிட்டனர்".

இந்த வாக்கியத்தின் முழுமையான அர்த்தமும் கவனிக்கத்தக்கது. களை என்பது பீடையாகி ஏனைய பீடைகள் போலல்லாது அதனை முகாமைத்துவப்படுத்துவதிலும் உண்மையிலேயே எங்களூர் விவசாயப் பெருமக்கள் களைத்தே விட்டனர். அந்தளவிற்கு களை முகாமைத்துவம் களைகட்டி விட்டது.

*பயிர் விளையும் நிலத்தில் அது எமக்கு தேவையற்றது எனக் கருதும் போது மட்டுமே அதனை களைகள் எனக் குறிப்பிடுகின்றோம்.*

நெல்வயலில் களைகள் என ஒரு வித்திலை, இருவித்திலை மற்றும் பன்னங்கள் பல வகையாக உள்ளன. பொதுவாக "தன்னினமே தனக்குப் போட்டி " என்பது இங்கே முழுமையாகப் பொருந்தும். நெல் போன்ற ஒருவித்திலைத் தாவரத்திற்கு ஒரு வித்திலை களைகள்தான் அதிகமான போட்டியாக இருக்கும்.

இந்தக்கூற்று ஏனைய பயிர்களுக்கு பொருத்தமாயினும் ஒரு வித்திலை களைகளுள் குறிப்பிட்ட வகையான "கோரை"க்கு இது பொருந்தாது. களைகளின் ராசா என கோரைகளை குறிப்பிடலாம்.

10-VII

ஆனால் சுதேச வைத்தியர் களும் சித்த ஆயுர்வேத வைத்தியர்களும் அதனை மருத்துவ குணம் நிறைந்த மூலிகை என பாதுகாக்கவும் இன்னும் தேவை கருதி வளர்க்கவும் முயற்சிக்கின்றனர். சித்த ஆயுர் வேத வைத்தியர்களுக்கு கோரைக் கிழங்கு பயனுள்ள மருந்து மூலிகை. அவர்களுக்கு அதுமுதன்மைப் பயிர். விவசாயத்தின் பக்கத்தில் களை என்பது சுதேச மருத்துவத்தின் பக்கத்தில் மருந்து மூலிகையாகி இறுதியில்சூழலியலாளரின் பக்கத்தில் பசுமைக்குரிய தாவரங்கள் (Vegetation) என்றாகிறது.

தேவைகருதிய சொற்பதங்கள் இவை என்றாலும் விவசாயத்தின் பக்கத்தில் இவையெல்லாம் களை தானே. இப்படியொரு இடக்குமுடக்கான கேள்வியும் எழுகின்றது. களை என குறிப்பிடுவதை முதன்மைப் பயிராக்கினால் அங்கேஅதற்கு வரவேற்பும் அரவணைப்பும் உண்டு. இந்த விடயத்தில் நாமெல்லோரும் சற்றேனும் சிந்திப்பது நல்லது. இனியொரு பசுமைப் புரட்சியில் இதற்கும் ஒரு இடம் உண்டு.



நல்லதொரு உதாரணத்துடன் இதனை விபரிக்கலாம் என எண்ணுகிறேன். அறுகு அல்லது அறுகம்புல் ஒரு வித்திலைத் தாவரமாயினும் பொதுவாக அதனை களை என்றே விவசாயத்தில் கற்றுக் கொடுப்பார்கள்.

ஆனால் தமிழ்நாட்டில் இப்போது அறும் புல் முதன்மைப் பயிராக பல விவசாயிகளினால் வளர்க்கப்படுகின்றது. தப்பித் தவறி அறுகம்புல் பயிராக வளருமிடத்தில் ஓரிரு நெல் முளைத்தெழும்பினால் அது அங்கே களையாகி களையப்பட்டு விடும்.

(தொடரும்)

---

## திருகோணமலையில் அத்துமீறி குடியேறியவர்களை வெளியேற்ற உத்தரவு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தின் படுக்காடு, முதலைமடு பகுதிகளில் உள்ள தமிழ், முஸ்லிம்களின் காணிகளில் அத்துமீறி குடியேறி உள்ள சிங்கள மக்களை உடனடியாக வெளியேற்றுமாறு திருகோணமலை மாவட்ட செயலாளர் மூதூர் மற்றும் சேருநுவர பிரதேச செயலாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட செயலாளர் தலைமையில் மூதூர் மற்றும் சேருநுவர பிரதேச செயலாளர்களின் பங்குபற்றலுடன் சேருநுவர பிரதேச செயலகத்தில் உயர்மட்ட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் தங்களது பாரம்பரிய காணிகளில் சிங்கள மக்கள் அத்துமீறி குடியேறியிருப்பதாகவும் இவர்களை வெளியேற்றி தங்களின் காணிகளை பெற்றுத்தருமாறு திருகோணமலை மாவட்ட செயலாளரிடம் வேண்டியிருந்தனர்.

இதற்கிணங்க திருகோணமலை மாவட்ட செயலாளர் அத்துமீறி குடியேறி உள்ள சிங்கள மக்களை வெளியேற்றுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளதுடன் தேவைப்படின் பொலிஸாரின் உதவியைப் பெறுமாறும் அவர் குறிப்பிட்டார். (6)

## மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் இன்று சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்சாரம் தடைப்படும் என சுன்னாகம் மின்சார சபையின் மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (4)

## செலிங்கோ நிறுவன பணிப்பாளர் சபையிலிருந்து லலித் கொத்தலாவல பதவி விலகினார்



(கொழும்பு)

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான செலிங்கோ காப்புறுதி நிறுவனப் பணிப்பாளர் சபையிலிருந்து அதன் ஸ்தாபக பணிப்பாளர் லலித் கொத்தலாவல பதவி விலகியுள்ளார்.

செலிங்கோ குழும நிறுவனம் மற்றும் காப்புறுதி நிறுவனத்தின் தலைவராகவும் லலித் கொத்தலாவல தற்போது பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஆண்டு பொதுக் கூட்டத்துடன் தமது பதவியை இராஜினாமா செய்ய உள்ளதாகவும் தனிப்பட்ட காரணங்களுக்காக பணியாளர் சபையிலிருந்து விலகுவதாகவும் லலித் கொத்தலாவல அறிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னணி வர்த்தக பிரமுகர்களில் ஒருவரான லலித் கொத்தலாவல, கோல்டன் கீ நிறுவன மோசடி வழக்கில் கைதுசெய்யப்பட்டு நீண்டகாலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

## பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 12 பாதாள உலகக் கோஷ்டியினர் நாட்டிலிருந்து தப்பியோட்டம்

(கொழும்பு)

பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 12 பாதாள உலகக் கோஷ்டி தலைவர்கள் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு நாட்டை விட்டு தப்பிச் சென்ற பாதாள உலகக் கோஷ்டித் தலைவர்களில் பலர் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படுகொலைகள், போதைப் பொருள் கடத்தல், கப்பல் கோரல், கடத்தல் உள்ளிட்ட பாரிய குற்றச் செயல்களுடன் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாகக் குறிப்பிடப்படுகி றது.

குடு லால், ரஜாப்டீன், டிகா பய்சர் போன்ற முக்கிய பாதாள உலகக் கோஷ்டித் தலைவர்கள் வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

குடுலால் அரசாங்கத்தின் சிரேஷ்ட பிரதி அமைச்சர் ஒருவரின் நெருங்கிய சகா எனவும், தற்போது அவர் லண்டனில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இந்தியா, டுபாய் மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் தஞ்சமடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

யுத்தத்தின் பின்னர் பாதாள உலகக் கோஷ்டியினருக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து இவர்கள் நாட்டை விட்டுச் தப்பிச் சென்றுள்ளனர். (6)

# வைகாசி மாதப் பலன்கள்



## கும்பம்

(அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூராட்டாதி1,2,3 ஆம் பாதங்கள்)

**நம்பியவர்களுக்கு கைகொடுக்கும் நல்ல உள்ளம் படைத்த கும்பராசி நேயர்களே!**

வைகாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது வந்த நாட்களை விட இனி வரப்போகிற நாட்கள் சிறப்பாக இருக்கும் என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தை குருவின் பார்வை பலம் சாதகமாக்கிக் கொடுக்கிறது அல்லவா? எனவே எடுத்த காரியங்களில் இருந்த தடை இனி அகலும். தாமதங்கள் விலகும்.கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற கவலை இனி தீரும்.

ஜென்மகுரு விலகி விட்டது. இனம்புரியாத கவலையில் இதுவரை சிக்கி தவித்து பணம் சம்பாதிப்பதிலேயே குறிக்கோளாக இருந்து பலரின் எதிர்ப்புகளைத் தேடிக் கொண்ட நீங்கள், இனி நிம்மதி அடையும் விதத்தில் கிரக நிலைகள் சாதகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கும்.

என்ன இருந்தாலும் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருக்கும் பொழுது வழிபாடு உங்கள் வளர்ச்சியைக் கூட்டும் என்றே சொல்ல வேண்டும்.குறிப்பாக சனியின் பிடியில் இருந்து தப்ப வேண்டுமானால் விநாயகப் பெருமானையும் அனுமனையும் விடாது வழிபட்டு வரவேண்டும்.

மே 16 ஆம் திகதி மிதுன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார்.4,9 க்கு அதிபதி 5இல் சஞ்சரிக்கும் பொழுது நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய செய்திகள் வந்து சேரும். பூர்வீக இடங்களில் உள்ள பிரச்சினை அகலும். பெற்றோர் வழி ஒத்துழைப்போடு தொழில் தொடர்புகளை வளர்த்துக் கொள்வீர்கள். பயணங்களால் பலன் கிடைக்கும்.தாய்வழி உறவினர்களுடன் ஏற்பட்ட பகை மாறும். தொலைபேசி வழி தகவல் தொழிலுக்கு உறு துணையாக இருக்கும்.

மே 27 ஆம் திகதி சிங்கராசிக்கு செவ்வாய் செல்கிறார். 3,10 க்கு அதிபதி செவ்வாய் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் ரீதியாக எடுத்த முயற்சிக்கு உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர். வழக்குகளில் வெற்றி கிட்டும்.தொழில் ஸ்தானத்தில் சனியின் பார்வை பதிவதால் கூட்டாளிகளிடம் பிரச்சினை வராமல் பார்த்துக் கொள்வது நல்லது.கூட்டுத்தொழில் செய்வோர் உடனுக்குடன் இலாபத்தைப் பிரித்துக் கொண்டால் ஏமாற்றத்தைச் சந்திக்காமல் இருக்க இயலும்.

சனி மே 27 ஆம் திகதி வக்ர நிவர்த்தியாகிறார்.எனவே அதன் பலம் கூடுகிறது. எனவே உடல் நிலையில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கையும் கூடும்.

மருத்துவச் செலவும் கூடும். திட்ட மிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்ய தெய்வ வழிபாடுகள் தான் உங்களுக்குத் தேவை.

மே 31 ஆம் திகதி இடப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார்.எனவே குடும்பத்தில் மகிழ்ச்சிகூடும்.பணவரவு திருப்திகரமாக இருக்கும்.தடைப்பட்டு வந்த காரியங்கள் துரிதமாக நடைபெறும்.

ஜூன் 10 ஆம் திகதி கடக சுக்ர னின் சஞ்சாரத்தால் உத்தியோக உயர்வும் ஊதிய உயர்வும் எதிர்பார்த்த படியே கிடைக்கும்.

இம்மாதம் அனுமன் வழிபாட்டை சனிக்கிழமை தோறும் மேற்கொள்ளுங்கள்.சகல நன்மைகளும் வந்து சேரும்.



## மீனம்

(பூரட்டாதி4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

**எதிர்காலத்தைப் பற்றியே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் மீனராசி நேயர்களே!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஜென்ம குருவின் ஆதிக்கமும் சப்தமச்சனியின் ஆதிக்கமும் இணைந்து செயற்படுவதால் எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வதே நல்லது.மருத்துவச் செலவுகள் கூடும். மனக்கசப்புத் தரும் செய்திகள் ஒவ்வொன்றாக வந்து சேரும்.எனவே வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். வாதிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

மாதத் தொடக்கத்தில் சுக ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கிறார்.சூரிய, சந்திர சேர்க்கையோடு அஷ்டமாதிபதி சுக்ரனும் சேர்ந்து இருக்கிறார். காரியங்களில் தாமதம் ஏற்படலாம். கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டினால் தான் இலாபத்தைக் காண இயலும்.

பொதுவாக இராசிநாதன் வலுவிழந்து இருக்கும் நேரங்களில் எதைச் செய்தாலும் யோசித்துச்செய்வதே நல்லது. த்னாதிபதி நீச்சம் பெற்றிருக்கும் பொழுதும், சிந்தித்துச் செயல்படுவதே நல்லது. அதேபோல் இந்த மாதத் தொடக்கத்தில செவ்வாய் நீச்சம் பெறுகிறார். எனவே சொத்துப்பிரச்சினை தலை தூக்கலாம். அங்காரக வழிபாடும், குரு வழிபாடும் அவசியம் உங்களுக்குத்தேவை.

மிதுன ராசியில் மே 16 ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. அஷ்டாமாதிபதி சுக ஸ்தானத்தில் சஞ்சரித்தால் குடும்பச் செலவுகள் கூடும். பழைய கடன்களைக் கொடுக்க புதிய கடன்களை வாங்கும் சூழ்நிலை உருவாகும்.பூமி வாங்கியதில் ஏற்பட்ட பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துக் கொள்வதே நல்லது. வாகனத் திருத்தச் செலவுகளும் பயணங்களால் சில இடையூறுகளும் உருவாகலாம். கால்நடை வளர்ப்பவர்கள் கவனத்துடன் செயல்படுவது நல்லது.

மே 27 ஆம்திகதி சிங்கராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாகக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா என்பது சந்தேகம் தான். எதிரிகளின் பலம் கூடலாம். சேமிப்பு கரையும்.புதியவர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்துசேரலாம்.

மே 27 ஆம் திகதி சனி வக்ர நிவர்த்தியாகிறார்.பார்க்கும் சனி பலம் பெறுவதால் உடல் நலத்தில் திடீர் தாக்குதல்கள் உருவாகலாம். மருந்து, மாத்திரைகளைக் கவனித்துச் சாப்பிடுவது நல்லது. ஒருசிலருக்கு பக்க விளைவுகள் ஏற்படலாம். பொறுமையைக் கையாள வேண்டிய நேரமிது

**சிவல்புரி சிங்காரம்**

மே 31 ஆம்திகதி இடபராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். சுக்ரன், சூரியனுடன் இணையும் புதனால் தடைகள் அகலும். தன வரவு கூடும். இடையில் ஏற்பட்ட ஏமாற்றங்கள் மாறும். கல்வி நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும். ஜூன் 10 ஆம் திகதி கடக ராசியில் சுக்ரன் சேர்வதால் பிள்ளைகள் வழியில் கல்வி நலன் கருதி ஒரு தொகையைச் செலவிடுவீர்கள். பணியாளர்களை மாற்றம் செய்து பரவசப்படுவீர்கள். சகோதரர்கள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

இம்மாதம் குரு மற்றும் சனியை வழிபட்டு வந்தால் குழப்பங்களிலிருந்து விடுபடலாம். (முற்றும்)

# இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவை மீள நிறுவுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவை மீள நிறுவுமாறு ட்ரான்பெரன்சி இன்டர்நெசனல் அமைப்பு ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை அரசியல் சாசனத்திற்கு அமைவாக இலஞ்ச ஊழல் மோசடி ஆணைக்குழுவிற்கு தகுதியானவர்களை நியமிக்குமாறும் சுயாதீன ஆணைக் குழுக்களை மீள உருவாக்க வேண்டும் எனவும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜீ15 நாடுகளின் தலைமைப் பொறுப்பு இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ள இந்தத் தருணத்தில் சர்வதேச சமூகத்திற்கு முன்னுதாரணமாக செயற்பட வேண்டியது அவசியம் எனவும், இவ்வாறு சுயாதீன ஆணைக் குழுக்களை நிறுவுவதன் மூலம் சர்வதேச சமூகத்தில் இலங்கையின் நன்மதிப்பு உயர்வடையும் எனவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஊழல் தடுப்பு பொறிமுறை ஓர் நாட்டின் நன்மதிப்பிற்கு மிகவும் அவசியமானதென தமது அமைப்பு கருதுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# பாராளுமன்ற தெரிவுக் குழுக்களில் ஆளும் கட்சியினர் அங்கம் வகிக்கின்றனர்

## ஐ.தே.க. அதிருப்தி

(கொழும்பு)

முக்கியமான பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களில் ஆளும் கட்சி அமைச்சர்கள் அங்கம் வகிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களில் அமைச்சர்கள் அங்கம் வகிக்கும் வழமை கிடையாதென கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

பொது முயற்சியாண்மை குறித்த தெரிவுக் குழு மற்றும் பொதுக் கணக்குகள் தொடர்பான தெரிவுக்குழு ஆகியவற்றில் ஆறு அமைச்சர்கள் அங்கம் வகிப்பதாக எதிர்க் கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் அங்கம் வகிக்கும் தெரிவுக் குழுவில் உண்மை நிலைமைகள் வெளியிடப்பட மாட்டாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


குறித்த தெரிவுக் குழுவின் தலைமைப் பதவிக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களை நியமிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களே தெரிவுக் குழுவின் தலைமைப் பொறுப்பை வகித்து வந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)









யாழ்.வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற புவியியல் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், தொண்டைமானாறு வெளிக்கள நிலையப் பொறுப்பாளர் திருமதி எம்.இராஜாராம் ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# புலிகள் உருவாக்கிய போர்ச் சூழல் எல்லோரையும் சந்தேகிக்க வைத்தது

## ஜூனியர் விகடன் விபரிப்பு

"புதையுண்டவர்கள்,
எரியுண்டவர்கள்,
கடலோடு போனவர்கள்
எல்லோரதும் தெளிவான,
திருத்தமான தகவல்கள்
உலகப் பணிமனையின் நிலத்தடி
ஆவணக் காப்பகங்களுக்குப்
போய்விட்டன.
எங்கள் எல்லோருடைய ஒற்றைப்
புதைகுழி மீது படைத் தளபதி...
தேசியக் கொடி ஏற்றுகிறார்கள்..."

ஈழத்துக் கவிஞர் சேரனின் கவிதை இப்படியாக நீள்கிறது. "கண்ணீர் எழுப்பிய நினைவுச் சின்னத்தில் ஒருவர் வெற்று வார்த்தைகளை எழுதுகிறார்.பலர் கனவு களைப் பின்னுகிறார்கள்!" என்று சேரனின் கவிதை பேசுகிறது. முள்ளிவாய்க்கால் என்ற கடலோரக் கிராமத்தின் பெயர் தமிழ் நினைவில் கல்வெட்டாய் பதிந்துவிட்டது.ஒருவர்... இருவரல்ல -சுமார் 40 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்ட இடம். அண்மைக்கால வரலாற்றில் இவ்வளவு பெரிய இனப்படுகொலை வேறு எதுவும் நடந்ததாக நினைவு இல்லை.

கடந்த ஆண்டு இதே நாட்களில் நாம் கவலையோடு தொலைக்காட்சித் திரைகளைப் பார்த்துக்கொண்டிருந்தோம். பிரபாகரனின் உடல் என்று காட்டியபோது அதை நம்ப முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அது ஓர் உடல் அல்ல. அங்கே கொன்றும், உயிரோடும் புதைக்கப்பட்ட 40 ஆயிரம் தமிழர்களின் குறியீடு அது. ஓர் இனம் அழிக்கப்பட்டதன் அடையாளம்.





தீ நாக்குகள் மேலேறி காற்றை நக்குகின்றன. கரும் புகை சூழ்கிறது அந்தக் காட்சி.

அந்தச் சாம்பலோடு பறந்து செல்லும் ஆயிரம் ஆயிரம் உயிர்களின் அவல ஓலத்தை நமக்குச் சொல்வதாக இருந்தது. எல்லாம் முடிந்துவிட்டது. ஓர்ஆண்டு ஓடிவிட்டது.புறநானூற்றுப் பாடல்களில் வரையப்பட்ட காட்சிகள் உயிர் பெற்று நிகழ்ந்து முடிந்து விட்டன.

புறநானூற்றில் ஒரு பாடல் வரும். உக்கிரப் பெருவழுதி என்னும் மன்னனை ஐயூர் மூலங்கிழார் என்ற புலவர் பாடிய பாடல்... "கருங்கைக் கொல்லனின் உலையில் காய்ச்சப்பட்ட இரும்பு, உறிஞ்சிக் கொண்ட நீரை எப்படி மீண்டும் பெறமுடியாதோ... அப்படி நீ கைப்பற்றிய நாட்டையும் உன் எதிரிகளால் திரும்பப் பெறமுடியாது!" என்று அரசனைப் பாராட்டும் பாடல். முள்ளிவாய்க் கால் உறிஞ்சிக் கொண்ட தமிழ் உயிர்களின் கதியும்அதுதான். அந்த உயிர்கள் மீண்டு வரப் போவது இல்லை. அங்கே சிந்தப்பட்ட கண்ணீரோ, குருதியோ எதுவுமே திரும்பக் கிடைக்கப் போவது இல்லை.

.முள்ளிவாய்க்கால் சோகத்தின் நினைவு நாள் அனுசரிப்போடு நமது கடமை முடிந்து விட்டதா?

ஈழத்தின் துயரம் தமிழக அரசியலுக்கு எப்போதுமே தீனியாக இருந்து வந்து இருக்கிறது.அதையும் தாண்டி தமிழ் மக்கள் அந்தப் பிரச்சினையை நேர்மையோடு பார்த்து வருவது உண்மை . அந்த உணர்வை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## தமிழகத்திற்குத் தீனிபோடுவதாகவே ஈழத்தமிழர் துயரம் இருந்துள்ளது

1983ஆம் ஆண்டில் இலங்கையில் இனக் கலவரம் மூண்டு தமிழர்கள் பெருமளவில் கொல்லப்பட்டபோது வீதிகளில் "தமிழன் கறி கிடைக்கும்" என்று எழுதிப் போட்டு சிங்கள இனவெறியர்கள் நர மாமிச வேட்டையாடியபோது, தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டபோது, தமிழகத்தில் மிகப் பெரும் கொந்தளிப்பு எழுந்தது.

தன்னிச்சையாக அது வெளிப்பட்டது. ஆனால், அப்போது கொல்லப்பட்டதை விடவும் மிகப் பெரும் எண்ணிக்கையில் முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்ற போதிலும், அப்போது ஏற்பட்ட கொந்தளிப்பு இங்கு உண்டாகவில்லை. அது ஒரு தேர்தல் பிரச்சினையாகக்கூட இல்லை. இந்த அதிர்ச்சிகரமான மாற்றம் எப்படி ஏற்பட்டது?

1983 கலவரத்தைப் பற்றிக் கேள்விப்படாத தலைமுறைதான் நமது இளைய தலைமுறை. அன்று உலகமயமும், திறந்த பொருளாதாரக் கொள்கைகளும் நம்மை இன்றுபோல எந்திரங்களாக்கி இருக்கவில்லை. கொஞ்சம் மனிதாபிமானம் நம்மிடம் ஒட்டிக்கொண்டிருந்தது. ஆனால், இன்றைய இளைய தலைமுறை அந்த உணர்வில் இருந்து விலகி எங்கோ சென்றுவிட்டது. தொழில் மயமான நேரத்தில் ஐரோப்பியச் சமூகத்தில் ஏற்பட்ட "அன்னியமாதல்' தான் இப்போது நமது சமூகத்தை ஆட்டிப் படைக்கிறது. இன்று நமது இளைஞர்களுக்கு தமது வாழ்வைத் தவிர சிந்திப்பதற்கு நேரம் இல்லை.

இன்னொரு புறம் தகவல் தொழில்நுட்பப் பெருக்கம்; அதன் தாக்கம். நூற்றுக்கணக்கான சேனல்களில் காட்சிகள் வழிகின்றன. ஈழத்துப் போர்க் காட்சிகளும் வேறு ஏதோ ஒரு சேனலில் ஓடும் ஹாலிவுட் திரைப்படக் காட்சியின் தொடர்ச்சியாக மாறிவிட்டது. எல்லாமே பிம்பங்கள் ; கணம் தோறும் மாறுகிற பிம்பங்கள்.இலவசத் தொலைக்காட்சித் திட்டத்துக்குப் பிறகு தமிழகம் அதிக அளவில் தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ள மாநிலமாகி விட்டது. அதன் அரசியல் , கலாசாரத் தாக்கம் என்னவாக இருக்கும் என்பதைப் பற்றி இதுவரை ஆழமாக நாம் ஆய்வு செய்ய வில்லை. ஈழப்படுகொலைக்கான தமிழக எதிர் வினையில் தொலைக்காட்சியின் பங்கு கணிசமானது.

முள்ளிவாய்க்காலை நினைவுகூரும் இந்நேரத்தில் அதிலிருந்து நாம் கற்றுக் கொண்ட பாடம் என்ன? முப்படைகளை வைத்திருந்த இராணுவ வலிமைகொண்ட ஓர் இயக்கம்; உலகின் மிகப் பெரிய இராணுவங்களில் ஒன்றான இந்திய இராணுவத்தையே எதிர்கொண்ட ஒரு தலைமை ; ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான அதன் சொத்து - அது தந்த பொருளாதார பலம்; உயிரைக் கொடுப்பதற்கு அஞ்சாத போராளிகள்- இப்படி சாகசத்துக்கு எல்லா விதத்திலும் பொருத்தமாக இருந்த சூழல். இதனால் "அவர்களை வெல்ல முடியாது" என்று அறைகூவல் விடுத்தோம். ஆனால், நம்பமுடியாத அளவுக்கு அந்தக் காட்சி சடசட வென சரிந்தது.அது எப்படி நடந்தது என்பதை நாம் ஆராய வேண்டும்.

உலக வல்லரசுகள் ஒன்றுசேர்ந்து கொண்டு இலங்கை அரசை ஆதரித்தன. இந்தியப் பேரரசு தமிழர்களுக்கு எதிராக இருந்தது; தமிழக ஆட்சியாளர்கள் நாம் எதிர்பார்த்த அளவுக்குப் போராடவில்லை. இப்படியாகப் பல்வேறு எளிமையான காரணங்கள் இப்போது கூறப்படுகின்றன. ஆனால், இவை எல்லாவற்றுக்கும் மேலான காரணங்களும் இருக்கின்றன.

"அரசியல் முதன்மை பெறாத ஆயுதப் போராட்டம் வெற்றியடையாது" என்ற சாதாரண உண்மையை ஈழம் நமக்கு மீண்டும் உணர்த்துகின்றது.விடுதலைப்புலிகள் ஆயுதவளங்களைச் சேர்ப்பதற்குக் காட்டிய அக்கறையை, அறிவாளிகளைச் சேர்ப்பதில் காட்டவில்லை.அது மட்டுமன்றி,அவர்கள் உருவாக்கிய போர்ச்சூழல் எல்லோரையும் சந்தேகிக்கிற நிலைக்குக் கொண்டு போனது. சிந்திப்பது என்பதே அங்கே துரோகத்தின் ஒரு வடிவமாகக் கருதப்பட்டது. சிந்தனையாளர்கள் கொல்லப்பட்டனர்... அல்லது, மௌனமாக்கப்பட்டனர்.

கடந்த 25 ஆண்டுகளாக முறையான கல்வி பெற முடியாத இனமாக ஈழத் தமிழினம் மாற்றப்பட்டது.ஒரு காலத்தில் அவர்கள் தான் தமிழ்க் கருத்தியலுக்கு முன்னோடியாக இருந்தனர்.

கைலாசபதியோ, தளையசிங்கமோ, டானியலோ தமிழ்நாட்டின் முற்போக்கு, நற்போக்கு, தலித் இலக்கிய முயற்சிகளுக்கு அவர்கள் தான் பாதை அமைத்தவர்கள். ஆனால் இன்று ஈழத் தமிழரின் நிலை என்ன? உலக நாடுகளில் எதிரிகளாகத் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழர்களை அந்தந்த நாடுகள் குற்றவாளிகள் போலவே நடத்துகிறார்கள்.

முள்ளிவாய்க்காலை நினைவு கூரும் இந்த நேரத்தில் சிலவற்றை நாம் திட்டமிட்டால் நல்லது.இப்போது இலங்கையில் தமிழர் வாழ்ந்த பகுதிகளில் மீண்டும் மக்கள் குடியேற ஆரம்பித்துள்ளனர். அங்கே மறு கட்டுமான நடவடிக்கைகளைச் செய்ய பெருமளவில் ஆட்கள் தேவைப்படுகின்றனர். போரால் அலைக்கழிக்கப்பட்ட தமிழர்கள் எந்தத் திறனையும் கற்றுக் கொள்ளவில்லை. அவர்களுக்கு உடனடியாகத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை (Skill Development) அளிக்க வேண்டியது அவசியம்.



(12 ஆம் பக்கம் பார்க்க...)

# ஏ.டி.எம்மின் தந்தை ஜோன் காலமானார்

(லண்டன்)



ஏ.டி.எம். (ATM) எனப்படும் தானியங்கி பணப்பரிவர்த்தனை இயந்திரத்தை முதன் முதலில் கண்டுபிடித்தவரான ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஜோன் ஷெப்பார்ட்பேரோன் காலமானார். அவருக்கு வயது 84.

நவீன தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்களில் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அன்றாட வாழ்வில் பெரும் பயனளிக்கக் கூடியது " ஏ.டி.எம்." என்றால், அது அவ்வளவும் மிகையாகாது.

இந்த ஏ.டி.எம்.மின் பயன்பாடுகள் குறித்து சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை. நம்மில் அனைவருக்குமே கண்டிப்பாக தெரிந்திருக்கும். ஏ.டி.எம்.மை Any time money என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டாலும், அவசர காலத்தில் நினைத்த மாத்திரத்தில் நம் வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை எடுத்துக்கொள்வதற்கு வசதியாக, நாம் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே ஏ.டி.எம். மையங்கள் விரவிக் கிடப்பதை அறிவோம்.

இச் சிறப்புமிக்க இயந்திரத்தை முதன் முதலில் உருவாக்கியவரே ஜோன் ஷெப்பார்ட் பேரோன் (John Shepherd -Barron) அண்மைக்காலமாக உடல் நல பாதிப்பால் அவதியுற்று வந்த இவர், மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பலனின்றி கடந்த சனிக்கிழமை மரணமடைந்ததாக, டெய்லி எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏ.டி.எம். உருவாவதற்கு தூண்டுகோலாக இருந்ததே ஜானின் மோசமான அனுபவம் ஒன்றுதான். ஒருநாள் அவசரத் தேவைக்காக பணம் எடுப்பதற்கு வங்கிக்குச் சென்றார் ஜோன். ஆனால் வங்கியின் வேலை நேரம் முடிந்துவிட்டதால் அவரால் பணம் எடுக்க முடியவில்லை. இந்த நிகழ்வுக்கு வருத்தப்பட்ட அவரின்மூளையில் உதித்தது ஒரு யோசனை... சொக்லெட் வெண்டிங் மெஷினைப் போலவே பணம் பெறுவதற்கு மெஷின் உருவாக்கினால் என்ன? என்பதே அந்த யோசனை. உடனடியாக செயல்படத் தொடங்கிய ஜோன் முதன் முதலில் ஏ.டி.எம்.மை உருவாக்கினார். அதற்கு உரிய அங்கீகாரமும் கிடைத்தது.

அதன்பின், முதன்முதலில் கடந்த 1967 ஆம்ஆண்டு இவர் உருவாக்கிய ஏ.டி.எம். இயந்திரம் இயங்கிலாந்தின் வடக்கு லண்டனில் உள்ள பார்க்லேஸ் வங்கியில் வைக்கப்பட்டது.

அதேபோல், ஆரம்ப கால கட்டத்தில் 6 இலக்க இரகசிய குறியீட்டு எண் (Pin) தான் பயன்படுத்தப்பட்டது. அதனை தன்னுடைய மனைவியால் நினைவில்கொள்ள முடியாததை அறிந்த ஜோன், நான்கு இலக்க "பின்" நம்பரை உருவாக்கித் தந்தார் என்பதும் நினைவுகூரத்தக்கது. (2-6)

# ஓராண்டு தனிச்சிறையா? மலேசியாவின் உத்தரவால் 75 ஈழத்தமிழர்கள் கண்ணீர்

மலேசிய கடற்படையிடம் சிக்கிக் கொண்ட 75 ஈழத்தமிழர்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டே போகிறது.

கடந்த வியாழக்கிழமை மலேசியா உளவுத்துறை அதிகாரிகள் அந்நாட்டு முகாமிலிருந்தும் 75 ஈழத்தமிழர்களின் விசாரணைக்காக அழைக்கப்பட்டனர். 75 ஈழத்தமிழர்களுக்கும் 20 நாட்களுக்கு பிறகு இருட்டறையாக இருந்த முகாமை விட்டு முதன் முறையாக வெளியே வந்தனர். வெளியே வந்தவர்களிடம் உங்களை யார் இங்கு அழைத்து வந்தது. போலி முகவர்களிடம் பணம் கொடுத்து ஏமாந்தீர்களா என்ற கேள்வியை முன்வைத்தனர்.

நாங்கள் பணம் கொடுத்து வரவில்லை. எங்களை அகதிகளாக ஏற்றுக்கொள்ளும் நாட்டுக்கு சென்று கொண்டிருக்கிறோம். எங்கள் கப்பல் பழுதானதால் நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தபோது மலேசிய கடற்படைதான் எங்களை அழைத்துவந்தது. நாங்களாக வரவில்லை என்று தெரிவித்தார்கள்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்ட அதிகாரிகள், இன்னும் ஓராண்டுக்குள் இதேமுகாமில் தான் நீங்கள் தங்க வேண்டி வரும். அதன்பின் நீங்கள் நாடு கடத்தப்படலாம் என்று தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே மனைவி, குழந்தைகளை பிரிந்து தனித்தனி அறையில் வாடிக் கொண்டிருக்கும் அவர்கள் , இன்னும் ஓராண்டுக்கு இதே கதிதானா என்று கண்ணீர் வடிக்கிறார்கள். (2-6)

# உலகப் புகழ்பெற்ற 5 ஓவியங்கள் பாரிஸ் நகரில் திருட்டு

உலகப் புகழ்வாய்ந்த ஐந்து ஓவியங்கள் பாரிஸில் திருடப்பட்டுள்ளன.

உலகப் புகழ்பெற்ற பிக்காசோ, மாட்டிஸ்ஸி உள்ளிட்ட முக்கிய ஓவியக் கலைஞர்களின் ஐந்து படைப்புக்களே திருடப்பட்டுள்ளன.

பிரான்ஸின் பாரிஸ் நகரில் உள்ள மொடர்ன்ஆர்ட் அருங்காட்சியகத்தில் இந்தக் கலைப் பொக்கிஷத் திருட்டுச் சம்பவம் இடம்பெயர்ந்துள்ளது.

களவாடப்பட்ட ஓவியங்கள் அனைத்துமே ஓவிய ஜாம்பவான்களாக கருதப்படும் முக்கிய கலைஞர்களின் உண்மையான படைப்புக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)




# கப்பலைத் தகர்த்தது வடகொரியா பதிலடிக்கு தென்கொரியா தயார்

(வோஷிங்டன்)

தென்கொரியாவின் போர்க் கப்பலை தனது நீர்மூழ்கிக் கப்பல் மூலம் வடகொரியா தகர்த்ததுபெரிய பிரச்சினையாகி உள்ளது. வட கொரியாவின் இச்செயல் ஆக்கிரமிப்பு என்று அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

அதன் அதிபர் லீ மியுங்- பாக் இது குறித்து கூறும் போது, வடகொரியா மீது திடமான நடவடிக்கை இருக்கும். தன் பொறுப்பை வடகொரியா உணர்ந்து சர்வதேச சமுதாயத்தில் பொறுப்புள்ள நாடாக இருக்க வேண்டும் என்றார். இத்தாக்குதலில் சீனா தவிர மற்ற எல்லா நாடுகளும் தென்கொரியா பக்கம் உள்ளன. ஆனால் சீனாவின் இச்செயல் வர்த்தக உற வைப் பாதிக்கும் என்று தென்கொரியா அறி வித்திருக்கிறது.

மேலும் ஏற்கனவே இரு கொரியாவுக்கும் இடையே இருந்த கசப்பான உறவு மேலும் மோசமடைகிறது. கடந்த 17 ஆம் திகதி அமெரிக்க அதிபர் ஒபாமா, தென்கொரிய அதிபர் லீயுடன் தொலைபேசியில் பேசும் போது தென்கொரியா பக்கம் அமெரிக்கா இருக்கிறது என்று கூறியிருக்கிறார். (2-6)

# கோஸ்டாரிகா நாட்டில் திடீர் நில நடுக்கம்

(சான்ஜோஸ்)

தென் அமெரிக்க கண்டத்தில் கோஸ்டாரிகா நாடு உள்ளது. இதன் தலைநகரான சான்ஜோஸ், நகரத்தில் நேற்று முன்தினம் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் லேசாக குலுங்கின.

எனவே, மக்கள் பீதி அடைந்தனர். வீடுகள் மற்றும் அலுவலகங்களை விட்டு வெளியேறி வீதியில் ஓட்டம் பிடித்தனர்.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.3 ஆகப் பதிவாகி இருந்தது.


சான்ஜோஸ் நகரில் 53 கிலோமீற்றர் ஆழத்தில் இது ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை. (2-6)



பிரதமராக பதவியேற்ற பின்னர் முதன் முறையாக வடக்கு அயர்லாந்துப் பகுதிக்குச் சென்றுள்ள இங்கிலாந்துப் பிரதமர் டேவிட் கமரூன் பெல்பாஸ்ட் நகரில் பிரதமர் பீற்றர் ரொபின்சன் மற்றும் துணைப்பிரதமர் மார்ட்டின் மெக்கின்னஸை சந்தித்தார்.

# தினமும் இஞ்சி சேர்த்தால் உடல் வலி குறைந்து விடும்



(வோஷிங்டன்)

தினசரி உணவில் இஞ்சியை சேர்த்து வந்தால் உடற்பயிற்சி செய்வதால் ஏற்படும் வலி உட்பட பல்வேறு தசை வலிகளை நீக்கிவிடும் என்று அமெரிக்க ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது, இஞ்சியின் நற்குணங்கள் அனைவரும் அறிந்தது தான். எனினும் சளி, இருமல் அஜீரணம் ஆகியவற்றை இஞ்சி சரி செய்யும் என்பது பொதுவான மருத்துவ பயன்கள். அவற்றுக்கு மேல் இஞ்சியின் செயல்பாடு பற்றி ஜார்ஜியா பல்கலைக்கழக உணவியல் பிரிவு விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர். அதன் முடிவு பற்றி பேராசிரியர் ஓ கானர் கூறியதாவது,

இஞ்சியின் பல்வேறு மருத்துவ குணங்கள் நிரூபிக்கப்பட்டவை. உடல் எரிச்சல், வயிற்றுப் புண் ஆகியவற்றை ஆற்றும் ஆற்றலும் இஞ்சிக்கு உள்ளதை சமீபத்தில் எலிகளிடம் நடத்திய சோதனையில் அறிந்தோம். தவிர உணவில் சேர்த்து கொதிக்க வைக்கப்படும் இஞ்சியால் உடல் வலிகளைக் குறைக்க முடியும் என தெரியவந்துள்ளது.

இதனை பச்சையாக உணவில் சேர்த்து சிலருக்கு 11 நாட்கள் அளித்து வந்தோம். இன்னொரு குழுவினருக்கு கொதிக்க வைத்த இஞ்சியை அதே 11 நாட்கள் கொடுத்து வந்தோம்.

அதன் பிறகு நடத்திய சோதனையில் சூடுபடுத்தப்பட்ட இஞ்சியை உணவில் சேர்த்தவர்களது உடல் வலிகளுக்கு நிவாரணம் கிடைத்தது தெரிய வந்தது.

குறிப்பாக கடினமான வேலை செய்பவர்கள், உடற்பயிற்சி மேற்கொள்பவர் களுக்கு ஏற்படும் தசை வலிகளை இஞ்சி குறைப்பது ஆய்வில் உறுதியானது. தினமும் உணவில் இஞ்சி சேர்த்துக் கொள்வோருக்கு உடல் வலிகளை 2.5 சதவீதம் குறைக்க முடியும் என்றார். (2-6)

# இங்கிலாந்தில் இந்தியருக்கு மந்திரிப்பதவி

(லண்டன்)

இங்கிலாந்தில் டேவிட் கமரூன் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சிக் கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது. கமரூன் பிரதமராக பதவி ஏற்றுள்ளார். அவரது மந்திரி சபையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சைலேஷ் வர்மா நேற்று முன்தினம் புதிய மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற விவகாரத்துறை மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள இவர் இந்தியாவில் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர். கன்சர்வேடிவ் கட்சியின் முதலாவது இந்திய வம்சாவளி மந்திரி என்ற பெருமையும் இவருக்கு கிடைத்துள்ளது.

புதிய அரசாங்கத்தில் நானும் மந்திரியாக பணியாற்ற வாய்ப்பு கிடைத்திருப்பது எனக்கு பெரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது எனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம் ஆகும் என்று சைலேஷ் வர்மா தெரிவித்தார். (2-6)

# நமது நாட்டில் பாடசாலைகள் அடிக்கடி மூடப்படுகின்றன

## அநுரகுமார எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

இந்நாட்டில் பாடசாலைகள் சமச்சீரற்ற தன்மையில் நோக்கப்படுகின்றன. அத்துடன் பாடசாலைகள் அடிக்கடி மூடப்படுகின்றன. 1997 களில் 10 ஆயிரத்து 358 பாடசாலைகள் இயங்கிவந்தன. எனினும் 1999 இல் 9410 பாடசாலைகளாக அவை குறைவடைந்தன.

அதாவது 948 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. வருடத்திற்கு 79 என்றவகையில் 5 நாட்களுக்கு ஒரு பாடசாலை வீதம் மூடப்படுகின்றது என ஜனநாயக தேசியக் கூட்டணி எம்.பியான அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில்,

யுனெஸ்கோ புள்ளிவிபரங்களின் அடிப்படையில் இலங்கையின் கல்வித்துறைக்கு உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 6சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும்.

இருப்பினும் கடந்த வருடத்தில் கல்வித்துறைக்கு அதனையும் விட மிகக் குறைந்தளவிலான தொகையே ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறைக்கான மூலதன செலவினம் கடந்த மூன்று வருடங்களில் 42 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கின்றது.

எமது நாட்டின் கல்வித்துறை இருளை நோக்கிச் செல்கின்றதா என்ற நிலை தோன்றியுள்ளது. இம்முறை கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் 48 வீதமானோர் சித்தியடையவில்லை. அதேபோல் கணித பாடத்தில் 51 வீதமானோர் சித்தியடையவில்லை. இதேபோல்தான் ஏனைய பாடங்களும் அமைந்துள்ளன.

இன்று எமது நாட்டில் கணிதபாடம் மற்றும் மொழிமூலத்தில் மாணவர்கள் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றனர்.

அநேகமான பாடசாலைகள் பின் தங்கிய நிலையில் இருக்கின்றன.

தொலைபேசி வசதிகள் அற்ற பாடசாலைகளாக 64 வீத பாடசாலைகள் இருக்கின்றன. ஒரு ஆசிரியரே கற்பிக்கின்ற 124 பாடசாலைகளும் இரண்டு ஆசிரியர்களே கற்பிக்கின்ற 316 பாடசாலைகளும் 10க்கும் குறைவான ஆசிரியர்கள் கற்பிக்கின்ற பாடசாலைகளாக இரண்டாயிரத்து 345 பாடசாலைகள் இனம் காணப்பட்டுள்ளன.

மேலும் மைதான வசதிகள் இல்லாத பாடசாலைகள் காணப்படுகின்றன. 71 வீதமான பாடசாலைகளுக்கு நூலக வசதிகள் இல்லை. 94 வீதமான பாடசாலைகளுக்கு இணையத்தள வசதிகள் இல்லை. இந்நாட்டில் பாடசாலைகள் சமச்சீரற்ற தன்மையில் நோக்கப்படுகின்றன. அத்துடன் பாடசாலைகளுக்கு மூடுவிழாவும் காணப்படுகின்றது என்றார். (2-6)

# பதப்படுத்திய இறைச்சியால் இதய நோய் ஏற்படும் சாத்தியம்

## ஆய்வில் தகவல்

(வோஷிங்டன்)

பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகளை உட்கொள்வதனால் அதிகளவு இருதய நோய் ஏற்படுவதாக நவீன மருத்துவ ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

சொசேஜஸ் போன்ற பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகளினால் அதிகளவு இருதய நோய் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எவ்வாறெனினும், பச்சை இறைச்சி வகைகளினால் அதிகளவு பாதிப்பு ஏற்படாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹாவார்ட் பல்கலைக்கழக மருத்துவ ஆய்வாளர்களினால் ஒரு மில்லியன் மக்களிடம் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நாள்தோறும் 50கிராம் அளவு பதப்படுத்திய இறைச்சியை உணவில் சேர்த்துக்கொள்ளும் நபர்களுக்கு நீரிழிவு நோயும் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(2-6)

# பல்கலை மாணவர்களின் தனித்துவத்தை பாதுகாக்க வேண்டியது எமது கடமை

## கலாநிதி ரஜீவ விஜேசிங்க

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பகிடிவதை என்பது மாணவர்களின் கல்விக்கும் மனித உரிமைக்கும் பாரிய பிரச்சினையாகவும் அச்சுறுத்தலாகவும் அமைந்து வருகின்றது. மாணவரின் தனித்துவத்தை இழக்கச் செய்கின்ற இத்தகைய செயற்பாட்டை உடனடியாகத் தடை செய்வதற்கு உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆளும் கட்சி எம்.பி.யான கலாநிதி ரஜீவ விஜேசிங்க நேற்றுமுன்தினம் சபையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற அமர்வுகளின் போது பல்கலைக்கழகங்களில் பகிடிவதை அதிகரிப்பு தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையொன்றை சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

ரஜீவ விஜேசிங்க எம்.பி. இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் தனித்துவத் தன்மையை பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். இந்நிலையில் அங்கு பகிடிவதை என்ற பெயரில் புதிய மாணவர்கள் வதை செய்யப்படுகின்றனர்.

பல சந்தர்ப்பங்களில் பகிடி வதையானது உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதையும் நாம் கண்டிருக்கிறோம்.

மாணவர்களின் அறிமுகத்துக்காகவே பகிடிவதை என்று கூறப்படுகின்ற இத்தகைய செயற்பாட்டினால் பகிடிவதைக்கு உள்ளாக்கப்படுகின்ற மாணவன் இம்சிக்கப்படுவதுடன் உள ரீதியாகவும் பாதிக்கப்படுகிறான். அத்துடன் அவனது மனித உரிமையும் அங்கு பாதிக்கப்படுகின்றது. இவையனைத்தும் அந்த மாணவனது கல்வியிலேயே பாரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்றார். (2-6)

# மழையுடன் கூடிய காலநிலை — தொடர்ந்தும் நீடிக்கும் —

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவி வரும் மழையுடன் கூடிய காலநிலை தொடர்ந்தும் நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. மேல் சப்ரகமுவ தென் மற்றும் மத்திய மாகாணங்களில் தொடர்ந்தும் மழையுடன்கூடிய காலநிலை நீடிக்கும் என தெரிவித்துள்ளது. இலங்கையின் கரையோரப் பிரதேசத்தில் நிலவி வரும் தாழமுக்க நிலைமை காரணமாகவே மழையுடன் கூடிய காலநிலை உருவாகியுள்ளதெனக் குறிப்பிட்டுள்ளது. லைலா புயற்காற்று இந்திய கிழக்கு கரையோரப் பகுதியை ஆக்கிரமித்துள்ளதாகவும் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. மேலும் நாட்டில் நிலவும் சீரற்றகாலநிலை காரணமாக பெய்து வரும் கடும் மழையினால் களுகங்கை, கிங் கங்கை, நில்வல கங்கை உள்ளிட்ட ஆறுகளின் நிர் மட்டம் உயர்ந்துள்ளது. களனி கங்கை பெருக்கெடுக்கும் நிலையில் உள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. இதனால் ஆறுகள் அமைந்துள்ள பகுதிகளில் வசித்து வரும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. சீரற்றகால நிலை காரணமாக இலங்கையின் எட்டு மாவட்டங்களில் சுமார் 5 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் கூறியுள்ளது. கொழும்பு, கம்பஹா,ா களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, புத்தளம், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 539 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 92 ஆயிரத்து 563 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். அத்துடன் 19 பேர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்து 261 வீடுகள் சேதமடைந்துள்ளன. 223 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. ஆயிரத்து 39 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் மேலும் கூறியுள்ளார். (2-6)

# புலிகள் உருவாக்கிய போர்ச் சூழல்...

(10 ஆம்பக்கத் தொடர்ச்சி...)

முறைசாராக் கல்வி மூலமாக அவர்களுக்கு உடனடியாகக் கல்வி வழங்கப்பட வேண்டும். ஐந்து அல்லது 10 ஆண்டுகள் என காலக்கெடு விதித்துக் கொண்டு பெருமளவிலான கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும். பதுங்கு குழிகளில் படித்த மாணவர்களுக்கு நல்ல வகுப்பறைகள் அவசியம். போரால் சிதைந்த பள்ளிகளைப் புனர் நிர்மாணம் செய்வதோடு புதிய பள்ளிகளைத் திறக்க வேண்டும்.

போரால் விதவைகளாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பெண்களின் மறுவாழ்வுக்கு உடனடியான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். பல ஊர்களில் ஆண்களே இல்லை என்ற நிலை உள்ளது. அங்கு பெண்கள் சேர்ந்து சிறு தொழிற் கூடங்களை அமைக்கப் பயிற்சியும் மூல வளங்களும் வழங்கப்பட வேண்டும். அவர்களது மறுவாழ்வுக்கான நியாயத்தை உணர்த்துமாறு மனோவியல் சார்ந்த கவுன்சிலிங் செய்யப்படுவது அவசியம்.

போரால் ஊனமாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள், பள்ளிகள் உருவாக்கப்பட வேண்டும். தற்போதைய நவீன மருத்துவ முறைகளைப் பயன்படுத்தி அவர்களது ஊனத்தின் தாக்கத்தை களைய வேண்டும்.

ஈழத்தின் இயற்கை வளங்களையும், விவசாயத்தையும், மீன்பிடித்தொழிலையும் புத்துயிர் பெற வைப்பதற்கான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சர்வதேசங்களில் இருக்கும் ஈழத் தமிழர்கள் தமது அரசியல் உரிமைகள் மீட்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி சர்வதேச சமூகங்களில் 'லாபி' செய்ய வேண்டியது மிகவும் முக்கியம். அதைப் போலவே, 40 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு போர்க்குற்ற விசாரணை மேற்கொள்ள வலியுறுத்த வேண்டியதும் அவசியம்.

தற்போது ஈழத்தமிழர்களின் ஒரு பிரிவினர் மேற்கொண்டு இருக்கும் 'நாடு கடந்த தமிழீழ அரசு' எவ்வாறு உருவெடுக்கும் என்பது இனிமேல் தான் தெரியும். அது எந்த அளவுக்கு வெற்றி பெறப் போகின்றது என்பதை விடவும், அது எத்தகைய பணிகளை ஆற்றப் போகிறது என்பதே கவனிக்க வேண்டியதாகும்.

தமிழ் இனத்துக்கு ஏற்பட்டுள்ள இந்த மாபெரும் துயரம் தமிழ்நாட்டில் உள்ள அறிவுஜீவிகளைப் பாதித்ததாகவே தெரியவில்லை. அதற்கு அவர்கள் மட்டுமே காரணமல்ல. இங்கு ஈழப் பிரச்சினையை பேசியவர்கள் அதை ஓர் அரசியல் பிரச்சினையாக மட்டுமே குறுக்கிவிட்டனர். அதன் பண்பாட்டு பரிமாணத்தை கவனிக்க தவறிவிட்டனர். அந்தத் தவறு களையப்பட வேண்டும். இங்கு அந்தப் பிரச்சினையில் கரிசனம் கொண்ட அனைவரும் ஒன்றிணைந்து இயங்க வேண்டிய நெருக்கடியான காலம் இது. அதைப் புரிந்து கொண்டு செயல்பட அறிவு ஜீவிகளும் முன்வர வேண்டும்.

80களில் வெளிவந்த ஈழத்தமிழ் இலக்கிய நூல்களை மறு பதிப்புச் செய்து மீண்டும் அறிவுத் தளத்தில் ஈழத் தமிழரின் நியாயங்களை எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை உள்ளது. இதை நமது படைப்பாளிகளும் பதிப்பாளர்களும் முன்னெடுத்துச் செய்யலாம்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தை பேசும் போது, அதை நமது அரசியல் சுயலாபத்துக்காகப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டியது மிக மிக அவசியம்.

நாமும் மனிதர்கள் தான், நம்மிடமும் கொஞ்சம் மனிதாபிமானம் உள்ளது என்பதை நிரூபிக்க இது ஒரு சந்தர்ப்பம். இப்போதாவது நாம் செயல்படுவோமா?

*நன்றி:-ஜுனியர் விகடன்*

குற்றம்மற்றவரை-ஒன்றுமறியாதவரை-நிராகரித்துக் கண்டிப்பது எவ்வளவு வெட்கக்கேடான காரியம். -சாக்ரட்டீஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஓ! உலக சமூகமே எம்மீது ஏன் இந்தக் கோபம்?

வன்னி யுத்தத்தின் ஓர் ஆண்டு நினைவின் அலைகள் சுனாமி வேகத்தில் எங்களை முட்டி மோதி உருக்குலைத்து விட்டன.

தேறவும் ஆறவும் முடியாத அவலம். முற்றுப் பெறாத முடிபாகிப் போய்விட்டன. இத் துன்பக் கடலில் மூழ்கி அதிலிருந்து எழுவதற்கு ஏதேனும் வழியுண்டா எனத் தேடிய போது சனல்-4 வெளிப்படுத்திய அவல நிகழ்வுகள் எம் நெஞ்சை சம்மட்டியால் அடித்து துன்பக் கடலில் மீளவும் ஆழ்த்திவிட்டது.

அந்தோ பரிதாபம் ஓ! உலகமே உனக்கு மட்டும் ஏன் இந்த குருட்டு நியாயம்?

ஈழத்தமிழர்கள் அப்படி என்னதான் தவறு செய்துவிட்டார்கள்?

அமைதிப் பேச்சு எனக்கூறி வந்தீர்கள். கிழமைக்கு ஒருதடவை என்ற அட்டவணை மாறி நாளுக்கு என்றாகி உங்களின் வருகை அதிகரித்தது.

ஐ.நாவின் செயலாளர் முதல் அடிமட்டத்தில் இருக்கக் கூடிய வெளிநாட்டு பிரதிநிதிகள் வரை வந்து போனீர்கள். பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றீர்கள்.

ஆறு தடவைகள் பேச்சும் நடந்தன. ஆனால் யுத்தம் முடிந்த பின் நீங்கள் பேசாமல் எங்களைப் பாராமல் விட்டுவிலகியப் போனமைக்குத் தான் 'உலகமயமாக்கல்' என்று பெயரா?

ஓ! உலக சமூகமே நீ எங்களுக்காக கண்ணீர் வடிக்க வேண்டாம். கதறி அழவேண்டாம். ஏன்? எங்களுக்காக நீதி கூட கேட்க வேண்டாம். எல்லா இன மக்களும் இந்த உலகில் அவரவர் நாட்டில் சகல உரிமைகளோடு வாழ வேண்டும் என்று கூறும் உன் கூற்றை எல்லா நாடுகளும் அமுல் படுத்துகின்றனவா என்று பார்.

சம உரிமை வழங்க மறுக்கும் நாடுகள் மீது நடவடிக்கை எடு- அதுபோதும் எங்கள் உரிமை கிடைப்பதற்கு.

ஆனால் நீயோ இனம் பார்க்கிறாய். சனத் தொகை பார்க்கிறாய். அரசு சொல்வதே சரியென முடிவெடுக்கின்றாய்.

இது எங்ஙனம் நீதியாகும்-நியாயமாகும். எல்லாம் இழந்துவிட்ட தமிழினம் உலகம் உதவும் என்று நம்பவில்லை.

ஆனால் ஊழ்வினை வந்துறுத்தும் என்று நாம் நம்புகின்றோம். முடிந்தால் நீங்கள் முந்திக் கொள்ளுங்கள்.

உங்கள் முந்தலுக்கான ஆதாரங்களாக சனல்-4 காட்சிகளை முன்னிறுத்துங்கள்.

இலங்கை அரசு மறுக்கிறது. மறுக்கும் உரிமை எவருக்கும் உண்டு. அதேநேரம் நடந்தது உண்மை என்பதை நிரூபிக்கும் உரிமையும் அனைவருக்கும் உண்டு.

மறுப்பவர்கள் மறுக்கட்டும். நிரூபிப்பவர்கள் சரியா நிரூபித்தால் எல்லாம் சரியாகும்.

# யாழ்ப்பாணத்தில் கணினிக் கல்வியை அறிமுகப்படுத்திய சிறி மாஸ்ரர்



கடந்த மாதம் 22ஆம் திகதி இறையடி சேர்ந்த சிறிதரன் (சிறி மாஸ்டர்) மறைந்து ஒரு மாதம் ஆகிறது. இவரது மறைவையும் அவர்தம் சேவையையும் நாம் நினைவு கூருவது அவசியம். 1980களில் கன்ரபியா (Cantabia) நிறுவனத்தில் இருந்து தனது கணனி கல்விபுகட்டலை ஆரம்பித்த இவர் 1990களின் பின்னரான நெருக்கடியான கால கட்டத்தில் தனது முயற்சிகளால் CSA என்னும் கணனி கல்வி நிறுவனத்தை திருநெல்வேலி நாவலடி ஒழுங்கையில் ஆரம்பித்து நடத்தினார்.

பல சவால்களுக்கு மத்தியிலும் அன்றைய காலகட்டத்தில் கற்பித்தல், பழுதுபார்த்தல், ஆலோசனை வழங்கல் என எல்லா விடயங்களிலும் தனது சேவையை வழங்கினர்.

கணனி செயல் நிரல் உருவாக்கல் தத்துவம் ( Computer Programming Principles) கற்பதற்கு பல்கலைக்கழக மாணவர்களும் இவரிடம் மேலதிக கற்றலை மேற்கொண்டு அவரிடம் தேவையான நூல்களையும், சஞ்சிகைகளையும் பெற்று பயனடைந்தனர்.

இடம் பெயர்ந்த வறிய மாணவர்கள் பலருக்கும் இலவசமாக கணனி கல்வி வழங்கினார். 1995 பாரிய இடம்பெயர்வின் பின்னரான கணனிகற்றல் கற்பித்தலில் இருந்த வெற்றிடத்தையும் திறம்பட நிவர்த்தி செய்து யாழ். தொழில்நுட்ப கல்லூரியில் வருகை விரிவுரையாளராக 6 வருடங்களுக்கு மேல் பணிபுரிந்து அனைவரது பாராட்டையும் பெற்றார்.

இவரது திறமையை இனங்கண்டு அவுஸ்திரேலிய கணனி நிறுவனம் ( Australian Computer Society) இவருக்கு வாழ்நாள் அங்கத்துவம் வழங்கியது.

இவரது கணனி கற்பிக்கும் ஆற்றல் இருபது வருடங்களுக்கு மேல் எமது பிராந்தியத்தில் பயன்பட்டுள்ளது. இவரிடம் கற்றோர் எல்லோரும் இன்று நல்ல நிலைகளில் விரிவுரையாளர்களாக அரச அமைப்புக்கள் சர்வதேச தொண்டு நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் அமைப்புகள் என்று எல்லா இடங்களில் இருப்பது இவரது திறமைக்கு சான்று.

தூய்மை, சேவை, அர்ப்பணிப்பு என பகவான் சாயி பாபாவின் முழு நேர தொண்டராக அவர் செய்த பணிகள் மறக்க முடியாதவை. இவர் பல மாணவர்களுக்கு ஆன்மீக வாழிகாட்டியாகவும் திகழ்ந்தார். இவர் கருசனையும் கண்டிப்பும் ஒன்று சேர பெற்றவர்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டு பல சிரமங்களுக்கு மத்தியிலும் கணனி பற்றியே சிந்தித்து தனது பணியை யாராவது தொடர வேண்டும் என்று கேட்டுகொண்டே இருந்தார். இவரது மாணவர்கள் இவரது நற்பணியை தொடர வேண்டும். இவரது துணைவியாரும் இவரது சேவைக்கு வளமூட்டி உதவிபுரிந்து அவரது இலட்சிய வாழ்க்கைக்கு வளம் சேர்த்தார்.

## நீத்தார் நயப்புரை

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அவரது சேவை, கடமை கண்ணியம் ஆகியவற்றை மதித்து அவரது மாணவர்கள் அவரது எண்ணப்படி ஒவ்வொருவரும் ஒரு ஏழை மாணவனுக்காவது அவரது நினைவாக கணனி கல்வியை ஏற்படுத்தி உதவுதல் எம்முன் உள்ள பணியாகும்.

-இ.சர்வானந்தா

# தப்புவதற்கான பல வழிமுறைகளை பிரபாகரன் வைத்திருந்தார்!!

## அரசியல் ஆய்வாளர் இப்போது கூறுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தப்புவதற்குப் பல வழிகளை வைத்திருந்தாக சிங்கப்பூர் பல்கலைக்கழகம் ஒன்றின் அரசியல் வன்முறை மற்றும் பயங்கரவாதம் தொடர்பான ஆய்வாளராக இருக்கும் றொகான் குணரத்ன தெரிவித்திருக்கின்றார்.

பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையாக கிறிஸ்ரினா என்ற கப்பலை வரவழைத்து அதிலிருந்து ஹெலிகொப்டரைப் பயன்படுத்தி தப்பவது அவருடைய திட்டமாக இருந்தது. கனடாவைச் சேர்ந்த சங்கிலி என்றழைக்கப்படும் ரவிச்சங்கர் கனகராஜா கப்பலை ஒழுங்கு செய்வதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார்.

அவர் கப்பலை ஒழுங்கு செய்து இந்தோனேசியாவிற்கு அருகில் நிறுத்தி வைத்திருந்தார். அச்சுதன் என்பவர் ஹெலி கொப்டரை ஒழுங்கு செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் அவரால் அதனை ஒழுங்கு செய்ய முடியாமல் போய் விட்டது. போரின் பின்னர் கிறிஸ்ரினா என்ற கப்பல் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இரண்டாவது வழிமுறையாக, பாதுகாப்பு வலயத்தை உடைத்துக் கொண்டு யால சரணாலயத்துள் நுழைவது. அங்கிருந்து தெற்கின் அடர்ந்த காட்டிற்குள் நகர்வது. அதனூடாக பாதுகாப்பு படையினரின் கண்காணிப்புக் குறைந்த தெற்குக் கடல் வழியாக தீவிலிருந்து வெளியேறுவது.

மூன்றாவது வழிமுறையாக தளபதி ராமின் உதவியுடன் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கிற்குத் தப்பிச் செல்வது. 2007இல் கிழக்கு கைப்பற்றப்பட்ட போதும் ராம் கிழக்கில் தொடர்ந்தும் தங்கியிருந்து வந்தார் என குணரத்ன குறிப்பிடுகிறார்.

ஆனால் இந்த எந்தவொரு வழிமுறையும் அவருக்குக் கைகூடவில்லை. ஏனெனில் இலங்கைப் படையினர் தரையின் எல்லாப் பகுதியையும் கடல் வழியையும் சுற்றி வளைத்திருந்தனர். மே 16ஆம் திகதி முல்லைத்தீவின் எல்லா கடற்கரைப்பகுதியும் இராணுவத்தின் கைகளில் வீழ்ந்தது. கடற்படையினரின் சுற்றி வளைப்பு தகர்க்க முடியாததாக இருந்தது.

நான்காவது வழிமுறையாக இலங்கைப் படைகளின் கடுமையான சுற்றிவளைப்பை நந்திக்கடலில் மேற்குப் புறத்தால் உடைத்துக் கொண்டு அடர்ந்த வன்னிக் காடுகளுக்குள் சென்று விடுவது. இதனால் தான் அங்கு விடுதலைப்புலிகள் தூரதிருஷ்டியுடன் பின்வாங்கும் போது ஆயுதங்களைப் புதைத்து வைத்தனர்.

புலிகளின் 140 போராளிகளுடன் பொட்டு அம்மான் மற்றும் சார்ள்ஸ் அன்ரனி (பிரபாகரனின் மகன்) ஆகியோரின் தலைமையில் பொது மக்களைப் போல் சென்று படையினரைத் தாக்குவது என்று திட்டமிட்டனர். இதன் போது 30 தற்கொலையாளிகள் படையினர் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். இராணுவத்தின் முன்னரங்கக் காவல்நிலைகளைத் தகர்த்த புலிகளால் அதற்கு மேல் முன்னேற முடியாமல்ட போய் விட்டது. பொட்டம்மானும் சார்ள்ஸ் உம் இதன் போதே உயிரிழந்தனர் என அவர் தெரிவிக்கிறார்.

நடேசன், புலித்தேவன், ரமேஸ் போன்றோர் சரணடைய முயன்றபோதே சுட்டுக்கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அவர்கள் மோதலின் போதே சுட்டுக்கொல்லப்பட்டதாக 2009 மே 24ஆம் திகதிய அரச பத்திரிகையான சண்டே ஒப்சேவரை ஆதாரம்காட்டி அவர் குறிப்பிடுகிறார்.

பிரபாகரனும் அவருடைய மெய்ப்பாதுகாவலர்களும் பொது மக்களுடன் இணைந்து நந்திக்கடலைக் கடப்பதற்காக வெள்ளை முள்ளிவாய்க்காலிலிருந்து கரையன் முள்ளிவாய்க்கால் வரை பொருத்தமான இடத்தைத் தேடியதாகவும், அதற்காக முழங்கால் வரை சேறு உடைய களப்புப் பகுதியில் காத்திருந்ததாகவும் எனினும் 19ஆம் திகதி காலை பத்து மணியளவில் விஜயபாகு றெஜிமென்டினால் நெஞ்சில் கிரனைட் தாக்குதலுக்குள்ளாகியும், தலையில் துப்பாக்கிச் சூடு பட்ட நிலையிலும் சகதி தொய்ந்த நிலையில் அவருடைய சடலம் கண்டெடுக்கப்பட்டதாகவும் றொகான் குணரட்ன கூறியிருக்கிறார்.

எனினும் இதுவரை காலமில்லாது றொகான் குணரட்ன இப்போது இத்தவலை வெளியிட்டிருப்பது சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறது என்கிறார் இராணுவ ஆய்வாளர் ஒருவர்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பிரபாகரன் 18ஆம் திகதி கொல்லப்படவில்லை. 19ஆம் திகதியே கொல்லப்பட்டார் என்று தெரிவித்திருப்பதும் போர்க்குற்ற விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டால் எனக்குத் தெரிந்தவற்றைச் சொல்வேன் என்று தெரிவித்திருப்பதும் இலங்கை அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளியிருப்பதால், இலங்கை அரச படைகள் போர்க்குற்றத்தில் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றும் முயற்சியிலுமே றொகான் குணரட்ன இத்தகவல்களைத் தெரிவித்திருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டுகிறார். (ச-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள் வீர இளைஞருக்கு



வீரர்களுக்கே முக்தி எளிதாகக் கிடைக்கிறது,பேடிகளுக்கு அல்ல.வீரர்களே. மகா மோகமாகிய எதிரிகள் உங்கள் முன்னுள்ளார்கள்.பெருஞ் செயல்களுக்குத் தடைகள் பல என்பது உண்மைதான் என்றாலும் இறுதி வரை விடாமல் முயலுங்கள். மோகமாகிய முதலையிடம் சிக்கிய மனிதர்களைப் பாருங்கள்.அந்தோ, இதயத்தைப் பிளக்கவல்ல அவர்களின் சோகக் கூக்குரலைக் கேளுங்கள்.

முன்னேறிச் செல்லுங்கள், முன்னேறிச் செல்லுங்கள் வீரர்களே! கட்டுண்டவர்களின் தளைகளை வெட்டி எறியவும், எளியவர் களின் துயரச்சுமையை குறைக்கவும், பாமரர்களின் இருண்ட உள்ளங் களை ஒளி பெறச் செய்யவும் முன்னேறிச் செல்லுங் கள். "அஞ்சாதே அஞ்சாதே" என்று முழங் குகிறது வேதாந்த முரசு.பூமியில் வசிக்கின்ற மனிதர்கள் அனைவருடைய இதய முடிச்சுக்களையும் அது அவிழ்த்து எறியட்டும்.

# ஆந்திராவில் 'லைலா' புயலுக்கு 17 பேர் பலி

(ஐதராபாத்)

ஆந்திர மாநிலத்தில் லைலா புயலுக்கு 17 பேர் பலியாகியுள்ளனர். இத் தகவலை ஆந்திர அரசின் பேரழிவு மேலாண்மைக் கான ஆணையாளர் டி.ராதாத செய்தியா ளர்களிடம் தெரிவித்தார்.

கிருஷ்ணா மாவட்டத்தில் 7 பேரும், நெல் லூரில் 4 பேரும், குண்டூரில் 3 பேரும், கிழக்குகோதா வரியில் 2 பேரும், பிரகாஸம் மாவட்டத்தில் ஒரு வரும் உயிரிழந்ததாக அவர் கூறினார். (6)

# நளினி புழல் சிறைக்கு மாற்றம் தாமதமாகும் என்று தகவல்



(சென்னை)

வேலூர் சிறையில் இருந்து நளினியை புழல் சிறைக்கு மாற்றம் செய்வது சீனியாரிட்டி அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும் என்று தமிழக சிறைத்துறை ஐ.ஜி. ஷியாம் சுந்தர் தெரிவித்துள்ளார்.

வேலூர் சிறையில் தனக்கு வழங்கப்படும் உணவில் மருந்து வைத்து தன்னைக் கொலை செய்ய முயற்சிகள் நடைபெறுவதாகவும் எனவே, புழல் சிறைக்கு தான் மாற்றப்பட வேண்டும் என்றும் நளினி கோரிக்கை விடுத்திருந்தார். இது குறித்து ஷியாம் சுந்தரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

நளினியைப் போன்று ஏராளமான கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் எனவே சீனியாரிட்டி மற்றும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இந்த விடயம் பரிசீலிக்கப்படும் என்றும் கூறினார். எனவே, நளினியை புழல் சிறைக்கு மாற்றம் செய்வதில் தாமதம் ஏற்படும் என்று தெரிகிறது. (2-6)




# லைலா புயல் மீண்டும் வர வாய்ப்புள்ளது டெல்லி வானிலை நிலையம் எச்சரிக்கை

(புதுடில்லி)

லைலா புயல் மியன்மார் வரை சென்று மீண்டும் வலுப்பெற்று திரும்பி வர வாய்ப்பு இருப்பதாக டில்லி வானிலை நிலையம் எச்சரித்துள்ளது.

வங்கக் கடலில் உருவான லைலா புயல் முதலில் தமிழகத்தை பயமுறுத்தியது. தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பலத்த காற்றுடன் இரண்டு நாட்களாக மழை பெய்தது. இந்த நிலையில் சென்னையை நோக்கி வந்த புயல் சற்று வடக்கில் திரும்பி ஆந்திராவை நோக்கி சென்றது.

ஆந்திர மாநிலத்தில் பபட்லா மாவட்டம் அருகே நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இருந்து புயல் கரையை கடக்க தொடங்கியது. மாலை 6 மணி நிலவரப்படி 50 சதவீதம் மட்டுமே கரையை கடந்ததாக சென்னை வானிலை மைய இயக்குனர் குழந்தைவேலு தெரிவித்தார்.

ஆந்திராவில் புகுந்துள்ள புயல் அடுத்து வடக்கு ஆந்திரா, ஒரிசா மாநிலங்களின் கடலோர மாவட்டங்கள் வழியாக மேற்கு வங்காளம் சென்று சேதத்தை ஏற்படுத்த கூடும் என்று கருதப்படுகிறது. இதைத் தொடர்ந்து ஒரிசா, மேற்குவங்காளஅரசுகள் முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

லைலா புயல் தற்போது வலு குறைந்த நிலையில் காணப்பட்டாலும் மேற்கு வங்காளம் வரை சென்ற பிறகு இந்த வார இறுதியில் வடக்கு வங்க கடலுக்குள் வந்து மீண்டும் வலுவடையும் ஆபத்து இருப்பதாக டில்லி வானிலை நிலையம் எச்சரித்துள்ளது.

மேலும் லைலா புயல் மீண்டும் மியன்மார் போய் வலுப்பெற்று வர வாய்ப்பு உள்ளதாக டில்லியிலுள்ள வானிலை இயக்குனர் ஜெனரல் அஜித் யோகி தெரிவித்துள்ளார். (2-6)

# சரக்கு ரயிலை தடம்புரள வைத்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகள்

## தொடரும் தாக்குதல்கள்

ளத்தை தகர்த்து சரக்கு ரயிலை தடம்புரளச் செய்தனர்.

இதனால் எண்ணெய்ப் பொருள்களை ஏற்றி வந்த அந்த ரயிலில் தீப்பிடித்தது. 14 சரக்குப் பெட்டிகளில் இருந்த எண்ணெய் எரிந்து நாசமானது. பிகாரின் மேற்கு சம்பரான் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்திய வடமாநிலங்களில் மாவோயிஸ்டுகளின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பது , சாதாரண மக்கள் முதல் பாதுகாப்புப் படையினர் வரை அனைவரையும் குண்டு வைத்துக் கொல்வது என்று வெறியாட்டம் ஆடி வருகின்றனர்.

இந்நிலையில் மேற்கு சம்பரான் மாவட்டம் சிந்தாமணி கிராமம் அருகே வியாழக்கப்பட்டிருந்த தண்டவாளத்தை அவர்கள் குண்டு வைத்து தகர்த்தனர்.

அப்போது அந்த வழியாக 50 எண்ணெய் டேங்கர்களுடன் வந்த சரக்கு ரயில் தடம் புரண்டது. இதில் 14 டேங்கர்களில் இருந்த எண்ணெய்ப் பொருள்கள் எரிந்து நாசமாயின. சுமார் நாலரை மணி நேரம் தீ கொழுந்து விட்டு எரிந்தது. இந்த சம்பவம் குறித்து அறிந்த ரயில்வே அதிகாரிகள் அப்பகுதிக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். மீதமுள்ள எண்ணெய் டேங்கர்களை அதிகாரிகள் மீட்டு முஸாபர்பூருக்கு அனுப்பி வைத்தனர்.

ரயில் கவிழ்ந்த இடத்தில் எச்சரிக்கை வாசகம் அடங்கிய நோட்டீஸ்களையும் மாவோஸ்டுகள் வீசிக் சென்றனர். இதைத் தொடர்ந்து பொலிஸார் அப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர். (2-6)

# பசியால் வாடும் இந்தியா

உலகில் மிக வறிய நிலையில் வாழும் மக்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியாவில்தான் இருப்பதாக உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.

உணவு என்பது மக்களின் அடிப்படை உரிமை என்ற போராட்டம் எழுந்திருக்கும் நிலையில் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களை வரையறுப்பதில் புது வழியைக் கடைப்பிடித்து மானிய விலையில் உணவுப் பொருட்கள் பெற்றுக் கொள்ளுவதற்குத் தகுதியான மக்களின் எண்ணிக்கையை பத்துக் கோடியால் அதிகரிக்க இந்திய அரசு எண்ணியுள்ளது.

ஆனால் அரசு வழங்கும் உணவுப் பொருளில்கால்பங்குதான் உரிய மக்களைப் போய் சேர்கிறது என்றும் மோசடி, திருட்டு இல்லாத வகையில் உணவு விநியோக முறை மறுசீரமைக்கப்பட வேண்டும் என்றும் இந்திய நிதியமைச்சின் தலைமைப் பொருளியல் ஆலோசகரான முனைவர் கௌஷிக் பாசு கூறுகிறார். (2-6)



# இரசாயனம் கலந்த நூல் இழைகளால் விபரீதம்

## நெசவாளர்களின் பார்வை பறிபோன பரிதாபம்

(பெங்களூர்)

கர்நாடகாவில் இரசாயனம் கலந்த பட்டு நூல்களை வைத்து நெசவு செய்த 60 நெசவாளர்களின் பார்வை பறிபோனது. கர்நாடக மாநிலம் மகதி நகரில் நெசவாளர்கள் அதிகம் செயற்கை பட்டு நூல் இழைகள் தயார் செய்கின்றனர்.

சமீபத்தில் நாராயணா என்ற நெசவாளர் நெசவு பணியில் ஈடுபட்டிருந்தார். பட்டு நூல் இழைகளை தண்ணீரில் நனைத்த போது அவரது கண்களில் திடீரென எரிச்சல் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் கடும் வலி ஏற்பட்டது. கண்கள் வீங்கின. பார்வை குறையத் தொடங்கியது. உடனடியாக அருகில் உள்ள கண் மருத்துவமனைக்குச் சென்றனர்.

டாக்டர்கள் அவரது பார்வை பறிபோய் விட்டதாகத் தெரிவித்தனர். மகதி நகரில் மட்டும் இது போல் செயற்கை பட்டு நூல் இழைகளை பயன்படுத்தி வேலை செய்த 60 நெசவாளர்களின் பார்வை பறிபோய் விட்டதாக அந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து கண் மருத்துவர்கள் கூறியதாவது, நெசவாளர்கள் வாங்கும் செயற்கை நூல் பட்டு இழைகள் இடைத் தரகர்கள் மூலமாக பெறப்படுகிறது. இவற்றின் எடை அதிகமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும்நல்ல தோற்றமுடையதாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் ஆபத்து விளைவிக்கக் கூடிய இரசாயனப் பொருட்களை கலந்து விடுகின்றனர். இந்த நூல் இழைகளை பயன்படுத்தும் நெசவாளர்களுக்கு பார்வை பறிபோய் விடுகிறது.

இதில் அதிர்ச்சி அளிக்கும் விடயம் என்னவென்றால் இடைத் தரகர்கள் மூலம் நூல்களை வாங்குவதால் அவை எங்கிருந்து வருகின்றன என்ற விவரம் கூட நெசவாளர்களுக்கு தெரிவது இல்லை இவ்வாறு டாக்டர்கள் தெரிவித்தனர். (6)

# வடிவேலுவைப் பற்றி சொல்லாத விடயங்கள் நிறையவே உண்டு

## சிங்கமுத்து குற்றச்சாட்டு

(சென்னை)

காமெடி நடிகர்கள் வடிவேலு, சிங்கமுத்து தகராறு தொடர்கிறது. வடிவேலு மனேஜருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக சிங்கமுத்துவை பொலிஸார் கைது செய்து ஜெயலில் அடைத்தனர். நான்கு நாள் சிறை வாசத்துக்கு பின் ஜாமீனில் வெளியே வந்த அவர் வடிவேலு மீது பரபரப்பாக குற்றம் சாட்டினார். சிங்கமுத்து கூறியதாவது,

வடிவேலு என்னை குட்டிக்கொண்டே இருக்கிறார். அவரது மனேஜரை நான் மிரட்டியதாக புகார் கொடுக்க வைத்து ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார். அந்த மனேஜர் கறுப்பா, சிவப்பா என்று கூட எனக்குத் தெரியாது. எந்தத்தப்பும்செய்யாதஎன்னைசதிசெய்து ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார். வடிவேலு பற்றி நான் சொல்லாத விடயங்கள் நிறைய இருக்கிறது. அந்த இரகசியங்களை விரைவில் வெளியிடுவேன். அப்போது வடிவேலும் என்னைப் போல் கம்பி எண்ணுவார்.


சினிமாவில் இருந்து என்னை ஒழித்துக் கட்ட பல வழிகளில் முயற்சிக்கிறார். பிறரை அழிக்க பொய்யாக எதை வேண்டுமானாலும் செய்வார். என் வீட்டு முன்னால் கூட வடிவேலு ஆட்கள் தினமும் தகராறு செய்கிறார்கள். அதை பொலிஸில் நான் சொல்லவில்லை. நடிகர் சங்கத்தில் தான் அவர் மேல் புகார் கொடுத்தேன். ஆனால் சங்கம் எதுவும் செய்யவில்லை.

வடிவேலு வறுமையால் வாடியபோது அவருக்கு கைகொடுத்து உதவினேன். அவருக்கு காமெடி எழுதிக் கொடுத்தவர்கள் பலர் இப்போது அவருடன் இல்லை. அவருடைய இரண்டு மனேஜர்கள் இப்போது உயிருடன்



இல்லை. வளர்ந்து விட்டதால் ஆணவமாக திரிகிறார். என்னை கைது செய்ய வைத்ததன் மூலம் அவரைப் பற்றி மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

ஜெயிலுக்குள் நிறைய விடயங்களை தெரிந்து கொண்டேன். கொலைக்காரர்களை சந்தித்தேன். கைதிகள் மத்தியில் தேவாரம், திருவாசகம், சொற்பொழிவு நடத்தினேன். கைதிகள் என்னிடம் பாசமாக பழகினார்கள் இவ்வாறு சிங்கமுத்து கூறினார். (2-6)



# கடைசி பந்தில் தென்னாபிரிக்கா அணி வெற்றி; சொந்த மண்ணில் மேற்கிந்தியத்தீவுகள் சோகம்

போத்தாவின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி கடைசிப் பந்து வரை போராடி ஒரு ஓட்டத்தினால் வெற்றி பெற்றது.

இதன் மூலம் சொந்த மண்ணில் மேற்கிந்தியத்தீவுகள் அணி இருபது-20 தொடரை 2:0 என்ற கணக்கில் முழுமையாக இழந்தது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 2 இருபது-20, 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடு கின்றது.

இதில் முதலாவது இருபது-20 போட்டியில் வெற்றிபெற்று தென்னாபிரிக்க அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற நிலையில் இரண்டாவதும் இறுதியுமான போட்டி நேற்றுமுன்தினம் அன்டிகுவாவில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் கிறிஸ் ஹயில் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 120 ஓட்டங்களை எடுத்தது.

தென்னாபிரிக்க அணி 12.1 ஓவர்களில் 59 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்து திணறிய நிலையில் மில்லர் 26 பந்துகளில் (2 சிக்ஸர் உட்பட) 33 ஓட்டங்களையும் போத்தா 22 பந்துகளில் (2 சிக்ஸர்கள் உட்பட) 23 ஓட்டங்களையும் எடுத்து அணியை மீட்டனர்.

பந்துவீச்சில் ஜெரோம் ரெய்லர் 3 விக்கெட்டுக்களையும் சமி 2 விக்கெட்டுக்களையும் பென் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 121 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி இறுதி பந்துவரை போராடி 7 விக்கெட்டுக்களையிழந்து 119 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஒரு ஓட்டத்தினால் தோல்வியடைந் தது.

இதில் பிரவோ 42 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் உட்பட) 40 ஓட்டங்களை யும் சந்தர்போல் 37 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 29 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜெகன் போத்தா 4 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் மோர்கல் 2 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு திருப்பு முனையமைத்த ஜெகான் போத்த ஆட்டநாயகனாகத் தெரி வானார்.

இவ் வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 2 போட்டிகள் கொண்ட இருபது-20 கிரிக்கெட் தொடரை 2:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

## இறுதிப் போட்டிக்கான ரிக்கெற்றுக்கள் தீர்ந்தன

உலகக் கோப்பை கால் பந்தாட்டத் தொடர் அடுத்த மாதம் 11ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகின்றது. ஒருமாதம் தொடர்ந்து போட்டிகள் நடக்கின்றன. மொத்தம் 64 போட்டிகள் நடைபெறுகின்றன.

அரைஇறுதிப் போட்டிகள் யூலை மாதம் 6ஆம் திகதி மற்றும் 7ஆம் திகதிகளில் நடக்கின்றன. இறுதிப்போட்டி யூலை 11ஆம் திகதி ஜோகனஸ்பேர்க் நகரில் நடக்கிறது. போட்டிகளுக்கான ரிக்கெற் விற்பனை ஏற்கனவே தொடங்கிவிட்டன. இதில் இறுதிப் போட்டிக்கான ரிக்கெற் வாங்க ரசிகர்கள் அதிகம் ஆர்வம் காட்டினார்கள்.

இதற்கான ரிக்கெற் விற்பனை கடந்த சனிக்கிழமை தொடங்கியது. நேற்று முன்தினத்துடன் அனைத்து ரிக்கெட்டுக்களும் விற்று தீர்ந்தன. இந்த மைதானத்தில் 94 ஆயிரத்து 700 இருக்கைகள் உண்டு. பாதுகாப்பு காரணமாக 80ஆயிரம் ரிக்கெற்றுக்கள் மட்டுமே விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# கால்பந்தாட்ட அரங்கில் தற்போது உண்மையான நட்சத்திரம் யார்?

கால்பந்தாட்ட நட்சத்திர வீரர் கிறிஸ்டியானா ரொனால்டோ. போர்த்துக்கல் அணியின் தலைவரான இவர், தற்போது ரியல் மாட்ரிட் கழக அணிக்காக விளையாடி வருகிறார்.

தற்போது இவருக்கு சவாலாக ஆர்ஜென்டினாவின் லியோனெல் மெஸ்சி உருவெடுத்துள்ளார். அடுத்த மாதம் நடக்கவுள்ள உலக கோப்பை தொடர் இவர்களுக்கு சோதனை களமாக அமையும். இதில் சிறப்பாக செயல்படுபவர் நிஜ நட்சத்திரமாக தன்னை அடையாளம் காட்டலாம்.







ஸ்பெயினில் சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டத்தொடர் நடக்கிறது. இதில் ரியல் மாட்ரிட் கழக அணிக்காக விளையாடிவரும் கிறிஸ்டியனா ரொனால்டோ இந்த பருவகாலத்தில் (2009-10) இதுவரை 18 கோல்கள் அடித்துள்ளார். இவர் சிறந்த கால்பந்து வீரருக்கான பிபா விருதை (2008) வென்றவர்.

அதே நேரம் பார்சிலோனா கழக அணிக்காக மெஸ்சி இதே பருவகாலத்தில் இதுவரை 26 கோல்கள் அடித்துள்ளார். தவிர பிபா சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை ரொனால்டோவிடம் இருந்து, கடந்த ஆண்டு (2009) தட்டிச்சென்றார்.

### பரவிய புகழ்

இந்த சம்பியன்ஸ் லீக் தொடரில் ஆர்சனல் அணிக்கு எதிரான காலிறுதியில் நான்கு கோல்கள் அடித்து தனது அணி வெற்றிபெற முக்கிய காரணமாக மெஸ்சி இருந்தார்.

இதன்பின் இவரது புகழ் பெரிய அளவில் பரவ ஆரம்பித்துள்ளது. இதையடுத்து இருவரில் யார் சிறந்த வீரர் என்ற விவாதம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து ரொனால்டோவிடம் கேட்டபோது,

எனக்கும் மெஸ்சிக்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. கட்டாயம் நான் அவரில்லை என்றார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லோரும் என்னைப்பற்றியும் மெஸ்சி குறித்தும் தான் பேசுகிறார்கள் ஆனால் நாங்கள் இதுகுறித்து பேசுவதே இல்லை. தனிப்பட்ட முறையில் எங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டதில்லை. எங்கள் இருவருக்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. நான் மெஸ்சியை விட உயரமானவன் எனது உடம்பும் சற்றுப் பெரியது.

அவருக்கு இந்த பருவகாலம் சிறப்பாக அமைந்துள்ளதால் தான் அதிக கோல்கள் அடிக்க முடிகிறது. தவிர கால்பந்து மைதானத்தில் அவர் மட்டும் தனியாக விளையாடுவது இல்லை. அவருடன் விளையாடும் சக வீரர்கள் தான் கோல் அடிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தருகிறார்கள்.

கால்பந்து போட்டிகுறித்து நன்கு தெரிந்தவர்கள், நான் என்ன சொல்லவருகிறேன் என்பதை புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன். இவ்வாறு ரொனால்டோ கூறினார்.

# உலகக்கிண்ண கால்பந்தாட்டம் ஆர்ஜென்டினா அணி அறிவிப்பு



(பியுனஸ் ஏர்ஸ்)

உலகக்கோப்பை கால்பந்தாட்ட தொடருக்கான ஆர்ஜென்டினா அணி அறிவிக்கப்பட்டது.

இதில் லியோனல் மெஸ்சி, கார்லஸ் டெவேஸ் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் 19ஆவது உலகக் கோப்பை கால்பந்தாட்டத் தொடர் அடுத்த மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இத் தொடருக்கான 23 பேர் அடங்கிய ஆர்ஜென்டினா இறுதி அணியை பயிற்சியாளரும் முன்னாள் அணித்தலைவருமான மரடோனா வெளியிட்டார்.

மெஸ்சி, டெவேஸ், கொன்சாலோ ஹிகியுன் ஆகிய முன்கள வீரர்கள் இருப்பதால் வலுவான அணியாக காட்சி அளிக்கிறது. கடந்த 2006இல் ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கிய ஏரியல் கார்சி வாய்ப்புப் பெற்றது ஆச்சரியமாகவுள்ளது.

இவரை தவிர அணித்தலைவர் ஜேவியர் மாஸ்செரானே, கோல் காப்பாளர் செர்ஜியோ ரொமேரா, செபாஸ்டியன் வெர்ரான், மார்டின் பலேர்மோ, சர்ஜியோ, அகியுரோ உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். பர்பரிசியோ கொலோசினி, ஜெனட்டி, காம்பியாசோ ஆகியோர் வாய்ப்புபெற இயலவில்லை.

கடந்த 1978இல் முதல் முறையாக சம்பியனான ஆர்ஜென்டினா பின் 1986இல் மாரடோனா தலைமையில் மீண்டும் கோப்பையை வென்றது. இவரது பயிற்சியில் இம்முறை சாதிக்க காத்திருக்கிறது.

# உலகக்கிண்ண தொடரில் பங்கேற்கத் தயார்-காக்கா

உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் பங்கேற்கக் கூடிய உடல் தகுதியுடன் தாம் இருப்பதாக பிரேசில் அணியின் நட்சத்திர வீரர் காக்கா அறிவித்துள்ளார்.

உடல் தகுதி மற்றும் அண்மைக்கால திறமை தொடர்பில் விமர்சனங்கள் வெளியிடப்பட்ட போதிலும் தாம் சிறந்த திறமைகளை வெளிப்படுத்த எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

காக்கா தற்போது ஸ்பெயினின் ரியல் மாட்ரிட் கழகத்தின் சார்பில் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

28 வயதான காக்கா 100 வீத உடல் தகுதியுடன் காணப்படுவதாகவும் நாட்டின் சார்பில் சிறந்த திறமைகளை வெளிப்படுத்த முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

காக்கா, ரியல் மாட்ரிட் கழகத்தில் இணைந்து கொண்டது முதல் சிறந்த திறமைகளை வெளிப்படுத்தவில்லை எனவும் அடிக்கடி உபாதைகளினால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பிரேசில் அணி இதுவரை 5 தடைவைகள் உலகக் கிண்ணத்தை சுவீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்
யாழ்ப்பாணம்.



## மாநகர சபை மேயரின்...

நேற்று அவர் யாழ்.நீதிமன்ற நீதிவான் அ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். இது தொடர்பான வழக்கை விசாரித்த நீதிவான்,

மன்றில் தோன்றியிருக்கும் சந்தேகநபரின் செயலானது நீதித்துறையை மிகவும் அவமானப்படுத்தும் ஒரு செயலாக நீதிமன்றம் கருதுகின்றது.

இதனைக் குற்றமென அவர் ஏற்றுக் கொண்டு பகிரங்கமாக மனம்வருந்தி மன்னிப்புக் கேட்டதனால் அவரின் மன்னிப்பை ஏற்று, அவரை எச்சரிக்கை செய்து இக் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்கின்றது எனத் தீர்ப்பளித்தார்.

ஜனநாயக நாட்டில் அரச இயந்திரம் சீராக இயங்க வேண்டுமாயின் நீதித்துறை சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் இயங்குவது அவசியம்.

நீதித்துறை சுதந்திரமாக இயங்காவிடின் அந்த நாட்டில் ஏனைய அரச இயந்திரங்களான நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத் துறையின் செயற்பாடுகள் அர்த்தமற்றதாகி விடும் என்றும் நீதிபதி தனது தீர்ப்பின் போது தெரிவித்தார்.

இதேவேளை இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மூன்று பத்திரிகைகளினதும் ஆசிரிய பீடப் பிரதிநிதிகள் நீதிமன்றில் பிரசன்னமாகி விளக்கமளித்தனர். (ச-5,7)

## இராணுவ...

பொன்சேகா சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த அரச சட்டத்தரணிகள் தடையை நீக்குமாறு கோரினர். வாதங்களை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் தடையை நீக்கி உத்தரவிட்டனர்.

சரத் பொன்சேகா கூட்டுப் படைத் தலைமை அதிகாரியாகப் பணியாற்றிய காலத்தில் அரசியல் தொடர்புகளைக் கொண்டிருந்ததாகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக இரண்டாவது இராணுவ நீதிமன்றம் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-3,5,9)

## அமைச்சர்...

இலங்கை மீதான யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் அமெரிக்க அரசாங்கத்திடம் அமைச்சர் விளக்கமளிக்கவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ச-5)

# அரச கட்டடங்களை விடுவிப்பது குறித்து கொழும்பில் உயர் மட்ட மாநாடு

## யாழிலிருந்து அதிகாரிகள் அழைப்பு

(கொழும்பு)

வடக்கில் படையினரின் பயன்பாட்டில் உள்ள அரச கட்டடங்களை மீண்டும் விடுப்பது தொடர்பாக ஆராய்வதற்கான உயர் மட்ட மாநாடு ஒன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கீழேயே இந்தக் கூட்டம் கூட்டப்படுகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றபோதிலும் பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் பல பாடசாலைகளை மீள இயக்குவது தொடர்பில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்த உயர் மட்ட மாநாடு ஒன்றுக்காகக் கொழும்புக்கு வருமாறு முக்கிய அரச அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனிடையே வன்னியில் யுத்த நடவடிக்கைகளால் முடங்கிப் போயிருக்கின்ற பாடசாலைகளை மீள இயக்குவது குறித்து ஆராய்வதற்கான உயர் மட்ட மாநாடு ஒன்று கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

வடக்கு யுத்தத்தின் பின்னர் கிளிநொச்சியில் இடம்பெறுகின்ற மிக முக்கியம் வாய்ந்த அரச மட்ட மாநாடாக இது அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வன்னியில்...

மக்களின் குறைநிறைகளையும் கேட்டறிந்தனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

பாதுகாப்புத் தரப்பினரின் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளைகள் மற்றும் கணவன்மாரை மீட்டல், சுயதொழிலுக்கான (விவசாயம்) உபகரணங்களைப் பெற்றுத் தருதல், ஆறு மாதங்கள் மட்டுமே நீடிக்கப்பட்டுள்ள உலர் உணவுத் திட்டத்தை ஒரு வருடமாக நீடித்தல், போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுத்தல், கிணறுகளைத் துப்புரவு செய்தல், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்,

பெற்றோரையிழந்து உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுக் கவனிப்பாரற்ற நிலையில் உள்ள சிறுவர்களுக்குச் சிறந்த வாழ்க்கை முறைமையினை ஏற்படுத்திக் கொடுத்தல் உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்குமாறு அம் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இந் நிலையில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் இன்றை விஜயத்தின் போது செட்டிக்குளம், வவுனியா பிரதேச தடுப்பு முகாம்களிலுள்ள மக்களைச் சந்திக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் தமது விஜயம் குறித்து இறுதி அறிக்கை வெளியிடப்படும் எனவும் அவர் கூறினார். (ச-3,5)

## இலங்கை போர்க் குற்றங்களுக்கான...

தமது புதிய ஆதாரங்கள் தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்ட செய்திகள் வருமாறு,

2009 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கையின் எயர் மொபைல் பிரிகேட்டைச் சேர்ந்த ஒரு சிப்பாயினால் எடுக்கப்பட்ட ஏறத்தாழ 200க்கு மேற்பட்ட புகைப்படங்களை மனித உரிமைக் கண்காணிப்பகம் பரிசீலித்தது.

இப் படங்களில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட ஒருவருடைய இந்த ஐந்து படங்களும் மிக முக்கியமானவை. சுயாதீனமான வட்டாரங்களின் தகவல்களின்படி இந்த இளைஞன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவின் நீண்ட கால உறுப்பினர் என்றும் தெரிய வருகின்றது.

முதலிரண்டு படங்களும் அவ் இளைஞன் முகத்தில் இரத்தத்துடன் அரைகுறை உயிருடன் இருப்பதைக் காட்டுகின்றது. தென்னை மரத்துடன் சேர்த்து அவ் இளைஞன் கட்டப்பட்டிருக்கின்றான்.

இராணுவ உடையணிந்த பலர் அவ் இளைஞனைச் சூழ நிற்கின்றனர். ஒருவர் இளைஞனின் கழுத்துக்கு அருகாக கத்தியை வைத்துக் கொண்டு நிற்கின்றார்.

அடுத்த மூன்று படங்களிலும் அந்த இளைஞன் ஏறத்தாழ மரணமடைந்து விட்டான். அவனுடைய தலை நிமிர்த்தப்பட்டுப் படம் பிடிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழீழக் கொடியினால் அவனுடைய உடல் அரைகுறையாகப் போர்த்தப்பட்டிருக்கின்றது. அவனுடைய முகத்திலும் உடலின் மேற்பாகங்களிலும் பெருமளவு இரத்தம் வடிந்திருக்கின்றது.

பின்னனைய மூன்று படங்களிலும் அவ் இளைஞனின் கழுத்துப் பகுதியில் வேறொரு நிறத்தில் படிந்திருப்பது அவனது மூளைப் பகுதிதான் என இப் படங்களை ஆய்வு செய்த மருத்துவ நிபுணர் தெரிவித்திருக்கின்றார். இது அவ் இளைஞன் தலையின் பின்புறத்தில் தாக்கப்பட்டிருப்பதனைப் புலப்படுத்துகின்றது எனவும் தெரிவித்திருக்கின்றார். இது தலையின் பின்புறத்தில் துப்பாக்கியால் சுட்டதாலோ அல்லது வெட்டுக் கத்தி, கோடரி போன்ற ஆயுதத்தால் தாக்கப்பட்டதாலோ ஏற்பட்டிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை இளைஞன் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது கொல்லப்பட்டதாக மனித உரிமைக் கண்காணிப்பகம் முடிபுக்கு வரவில்லை. கிடைத்துள்ள ஆதாரங்கள் ஒரு முழுமையான விசாரணையை வேண்டி நிற்கின்றன.

பல படங்கள் விடுதலைப்புலிகளின் சீருடையில் இருந்த பெண் உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது என்பதை அம்பலமாக்கியுள்ளன.

அவர்கள் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டிருக்கலாம். அல்லது அவர்களுடைய சடலம் சிதைக்கப்பட்டிருக்கலாம். மீண்டும் இவை குறித்துத் திட்டவட்டமான முடிபுக்கு வர முதல் முழுமையான விசாரணை ஒன்று அவசியம்.

நடந்தவற்றிலிருந்து கற்றுக் கொள்வதற்கும் இணக்கத்தை ஏற்படுத்துவதற்குமாக அரசாங்கத்தினால் மே 17, 2010 இல் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வரும் விமர்சனங்களை சமாளிக்கவே நியமிக்கப்பட்டுள்ளதாக உணர முடிகின்றது.

அது நியமிக்கப்பட்டதற்கான காரணம் 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை ஏன் சீர்குலைந்தது என ஆராய்வதாக இருக்கும் எனச் சொல்லப்படுவதிலிருந்தே அதன் நோக்கம் புலனாகின்றது.

போரின் இறுதிக் கட்டத்தில் அரச படைகளாலும் விடுதலைப்புலிகளாலும் மேற்கொள்ளப்பட்ட துஷ்பிரயோகங்களுக்குச் சற்றும் சம்பந்தமில்லாத விடயம் இது.

அது மட்டுமல்லாமல் இவ் ஆணைக்குழு தற்போது வெளிவந்திருக்கும் புதிய தகவல்கள் குறித்து விசாரணை மேற்கொள்ளப் போவதில்லை.

அத்தோடு சாட்சியமளிப்பவர் அல்லது பாதிக்கப்பட்டவரைப் பாதுகாக்கும் வகையிலும் அது உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் சித்ரா ரஞ்சன் டி சில்வா முன்னாள் சட்ட மாஅதிபர் ஆவார்.

2006 ஆம் ஆண்டின் ஜனாதிபதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் தலையிட்டதற்காக கடுமையாக விமர்சிக்கப்பட்டவர் இவர்.

இவருடைய நடவடிக்கைகள் காரணமாகத்தான் பத்து சர்வதேச நிபுணர்கள் கொண்ட விசாரணைக்குழு விசாரணைகளிலிருந்து விலகியது.

இந்த விசாரணைகள் வெளிப்படைத் தன்மை மிகுந்ததாகவோ சர்வதேச தரத்திற்கு அமையவோ நடத்தப்படாததால் தாம் அதிலிருந்து விலகுவதாக அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இலங்கைக்கு ஆணைக்குழுக்கள் தொடர்பாக ஒரு நீண்ட வரலாறு இருக்கின்றது. குறிப்பாக 1948 இல் சுதந்திரம் அடைந்த பிற்பாடு இவ்வாறான 9 ஆணைக்குழுக்களை அது நிறுவியிருக்கின்றது.

அதில் ஒன்றுகூட உருப்படியான முடிபு எதனையும் அறிவிக்கவில்லை. மார்ச் 5 ஆம் திகதி ஐ.நா.செயலாளர் நாயகம் இலங்கை விவகாரங்களில் தனக்கு ஆலோசனை வழங்க ஒரு நிபுணர் குழுவை அமைக்கப் போவதாகச் சொல்லியிருந்தார்.

உடனடியாக இலங்கையின் உள் விவகாரங்களில் அவர் தலையிடுவதாக பான் கீ மூன் மீது தாக்குதல் தொடுத்தது இலங்கை அரசு. இன்றுவரை அவர் அக் குழுவை நியமிக்கவில்லை.

பான் கீ முனுடைய செயலற்ற தன்மை துஷ்பிரயோகம் செய்தோர் மிகச் சாதாரணமாக எவ்வித அர்த்தமுமின்றி ஆணைக் குழுக்களை நியமிக்கவோ, மிகப் பெரிதாகச் சத்தமிட்டு எல்லா வகையிலும் நீதியை மறைக்கவோ வாய்ப்பாக இருக்கின்றது.

ஒரேயொரு நியாயமான வழிதான் இருக்கின்றது. அது சர்வதேச விசாரணை ஒன்றை ஆரம்பிப்பதுதான் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

## இலங்கையின்...

விடவில்லை. யுத்தக் குற்றங்களுக்கான அமெரிக்கத் தூதுவர் இலங்கை குறித்த தனது அறிக்கையை அடுத்த மாதம் 16 ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளார்.

பிரசெல்ஸைத் தளமாகக் கொண்ட சர்வதேச நெருக்கடிக் குழு கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கையில் யுத்தக் குற்றங்கள் தொடர்பான அறிக்கையை வெளியிட்டது.

எனினும் எப்போதும் போல் இலங்கை அரசு பிடிவாதமாகவுள்ளது. அது இதுவரை சட்ட விசாரணைகளையோ, சர்வதேச தடைகளையோ எதிர்கொள்ளவில்லை.

சமீபத்திய அறிக்கைகள் காரணமாக இலங்கையின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை. ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிகள் அவரது கையைப் பலப்படுத்தியுள்ளன.

இதன் காரணமாகச் சர்வதேச விசாரணைகள் குறித்து அவர் அஞ்சப் போவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

பொருளியல்-NIGHT CLASS
DMI - JAFFNA
பொருளியல்-MCQ
குறிப்பு:- வெளி மாணவர்களுக்காகவே இந்த ஆரம்பம்
★ பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
★ பதிவுகளை மேற்கொள்பவர்கள் MCQ புத்தகத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
நேர அட்டவணை நாளை அறிவிக்கப்படும்.
By: S.S. சிறி (B.Com)
(அ-301)

லிகிதர் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற நிறுவனமொன்றிற்கு லிகிதர் (Clerk) தேவை. ஓய்வூதியம் பெறுபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
NEW ASIAN CENTER
No. 56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 071 8561654
(1545)

அழகுக்கு அழகு சேர்க்கும் அசல்
22 கரட் தங்க நகைகளை
நவீன வடிவமைப்புகளில்
பெற்றுக் கொள்ள
பிரம்யா நகைமாடம்
யாழ். வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
(அ-225)



நியூ சிற்றி ரேடேர்ஸ் இடமாற்றம்
சகல விதமான SONY, PANASONY (14,21") கலர் ரீவிகள் SONY, PANASONY, LG DVD பிளேயர்கள், குளிர்சாதனப் பெட்டிகள், டிஸ் ரீவி றிசிவர்கள், றேடியோ, கார்றேடியோ, கசற் றெக்கோடர், றைஸ் குக்கர்கள், காஸ்குக்கர்கள், மின் கேற்றல்கள், அயன்கொட்பிளேட், மண்ணெண்ணெய் குக்கர்கள், பூவர்கள், மேசை, கூரை மின் விசிறிகள், சாஜ்ஜர்லைட் வகைகள், வீட்டுமின் வயரிங் பொருட்களை ஒரே இடத்தில் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
நியூ சிற்றி ரேடேர்ஸ்
319 A, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.
(அ-298)

தேவை
வெகுவிரைவில் நிலவு நட்சத்திரமாய் ஜொலிக்க இருக்கும் MOON STAR இசைக்குழுவுக்கு கலைஞர்கள் தேவை.
★ ஓகன், தபேலா, லீற்கிற்றார், பேஸ்கிற்றார், (B)பாட் வாத்தியங்களை இசைக்கும் திறன் கொண்டவர்கள்.
★ பாடகர்கள், அறிவிப்பாளர், ஆண், பெண் இருபாலாரும் 26.05.2010 முன்பு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.
30, கம்பஸ் லேன், திருநெல்வேலி.
பணிப்பாளர்
MOON STAR INSTITUTE
(1538)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.